


சிறுகதை

# மஞ்சரி

மாதஇதழ்

27

ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 27 ஐப்பசி 2022 £4.00

வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்



சியாமளா யோகேஸ்வரன்
பக்கம் 3
இலங்கை



சண் வேல்
பக்கம் 8
இலங்கை



சூசை எட்வேட்
பக்கம் 12
இலங்கை



சி. சிறீரங்கன்
பக்கம் 19
இலங்கை



நிலவந்தன்
பக்கம் 22
இலங்கை



ஷெல்லிதாசன்
பக்கம் 24



அ. முத்துலிங்கம்
பக்கம் 25



அகரா
பக்கம் 29



பேராசிரியர் யோகராசா
பக்கம் 31


20% கழிவு

## SKM BOOKS FOR SALE

20% கழிவு




300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 200 ரூபா 300 ரூபா 350 ரூபா




200 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 400 ரூபா

எனது எல்லாப்புத்தகங்களும்
சிறுகதை மஞ்சரிகளும்
*Amazon Kindle* இல் உள்ளன.
*www.amazon.co.uk/ebooks* இல்
**Type M.Thayalan**

India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro
*மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து 20% கழிவில் பெறலாம்*

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO
0717196060



# தமிழர்களின் பிரச்சினைகளும் தமிழர் தலைமைகளும்!

தமிழ்மக்களின் பிரச்சினைகள் நான் சிறுவனாக இருந்தகாலத்தில் எப்படி இருந்ததோ இன்றும் அப்படியே இருக்கிறது. எதுவித மாற்றங்களுமற்ற ஒரே கோசங்கள் எழுப்பப்படுகின்றன. சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் 5 வருடத்திற்கு ஒருமுறை தலைவர்களும் தலைவர்களின் அடிவருடிகளும் மாறுகிறார்கள். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இதற்கான சூழ்நிலைகள் சிறிதும் இல்லாமல் ஒரே தலைமைகள் சாகும்வரை கதிரையைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இடையில் சில காலம் தங்களை மக்கள் வெறுக்காதிருக்க இளைஞர்களை உலுப்பிவிட்டு அந்த உலுப்பல் அதிவேகமான ஆயுதப்போராட்டமாக மாறி எழுந்த வேகத்தில் இறங்கிப் புஸ்வாணமாகி ஒன்றுமிலாது நிற்கிறது. அந்தக் காலத்திலும்கூட இன்றைய தலைவர்கள்தான் கதிரைகளைக் கட்டிப்பிடித்தபடி கதிரைகளுக்குக் கீழ் ஒழிந்திருந்தனர் என்பதும் மறக்க முடியாத ஒன்றே.

ஆக மொத்தத்தில் தங்களால் இந்த உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று தெரிந்தும் தள்ளாத வயதில் பதவியைவிட்டு இறங்காமல் இறக்கும்போதும் தலைவனாகத்தான் சாவேன் என்ற அசட்டுப் பிடிவாதத்துடன் இருக்கும் தலைவர்களைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை.

தலைவர்கள் நிலை இதுவென்று தெரிந்தும் மக்கள் வாய்மூடி மௌனிகளாக இருப்பது ஏன் என்று மட்டும் எனக்குப் புரியவில்லை?
மக்கள் இவர்களையிட்டு சலிப்படைந்துவிட்டார்களா? அல்லது வெறுப்படைந்து ஏதோ செய்யட்டும் என்று ஒதுங்கிவிட்டார்களா ? என்பதும் மனதிற்குப் புரியாத புதிராகவே உள்ளது.

தாங்கள் சகல வசதிகளோடு இருப்பதினாலும் தங்கள் புத்திரர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி படிக்க வைப்பதினாலும் தமிழர்களுக்குப் பிரச்சினை ஒன்றும் இல்லை என இவர்கள் உள் மனது சொல்கின்றதென்ற ஐயமும் எழுகிறது. இளைஞர்கள் கையில் அரசியலைக் கொடுத்துவிட்டால் தங்கள் இருப்பு கேள்விக் குறியாகிவிடுமோவென்ற ஐயப்பாடும் இவர்கள் மனதில் எழுகின்றதோ என நினைக்கவும் தோன்றுகிறது.
எது எப்படி இருந்தபோதும் ஒரு விடயம் துலாம்பரமாகத் தெரிகிறது. அதாவது தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் என்றைக்கும் தீரப்போவதில்லை என்பதுதான். மக்கள் தங்கள் மனங்களை மாற்றாதவிடத்து எதுவுமே மாறப்போவதில்லை.

**மு. தயாளன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...


**1** **தமிழர் பிரச்சினைகளும்.......**
ஆசிரிய தலையங்கம்

**2** **உள்ளடக்கம்**

**3** **ஆறுவது சினம்**
சியாமளா யோகேஸ்வரன்

**8** **செல்வாக்கு**
சண் வேல்

**12** **வயோதிபர் சங்கம்**
சூசை எட்வேட்

**15** **கரும்பலகை (தொடர் கதை)**
மு.தயாளன்

**19** **கெற்றப்போல்**
சி. சிறீரங்கன்

**22** **பங்கர்**
நிலவந்தன்

**24** **அதே வெள்ளைக் கொக்குகள்...**
ஷெல்லிதாசன்

**25** **கோடைமழை (சிறப்புச் சிறுகதை)**
அ.முத்துலிங்கம்

**29** **தொலைந்து போன மனிதன்**
அகரா

**31** **மஞ்சரி 25 ஒரு பார்வை**
பேராசிரியர் செ. யோகராசா


**சிறுகதை மஞ்சரி 25 இன் சிறந்த இருகதைகள் சிறுகதைகள்**

1. ஆழ்மனக்குமுறல் - ஆர்த்திகா சுவேந்திரன்
2. அமாவாசைக்குள் ஒரு இரவு - பசறையூர் ஏ. எஸ்.பாலச்சந்திரன்

## எழுத்தாளர்கள் கவனத்திற்கு:

மஞ்சரியில் எழுதும் இலங்கையில் வதியும் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 1000 ரூபா தரப்படும் என்று கூறியுள்ளோம். இது கிடைக்காதவர்கள் தயவுசெய்து உங்கள் வங்கிக் கணக்கு விபரங்களை எமக்கு அறியத்தரவும். ஒவ்வொரு தடவை நீங்கள் கதையை அனுப்பும்போதும் இந்த விபரங்கள் கதையுடன் இணைக்கப்படவேண்டும். (ஆ-ர்)

**அன்பான வேண்டுகோள்.**

அன்பு நிறை எழுத்தாளர்களே உங்கள் படைப்புகளை ஆகக்குறைந்தது மூன்றுதரம் வாசித்துத் திருத்தி அனுப்புங்கள்.

**வாசகர்களுக்கொரு...**

மஞ்சரியை வாசித்ததும் தயவு செய்து உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன்,
திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம்,
திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்,
ஓவியர் கைலாச நாதன் ஓவியை கோகிலா டயாளினி


**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** இணையத்தளம்
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன், R. கோகிலா டயாளினி

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா
**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**சந்தா விபரம்:**
**Srilanka:**900Rs/Year
Bank detail : Mrs Sasikala Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி நேரம்

சியாமளா யோகேஸ்வரன்



**கா**லை உணவுக்கான அழைப்பு மணி ஒலித்து விட்டிருந்தது. சுமணனுக்கு பசி என்ற உணர்வே எழும்ப வில்லை. தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் படுத் திருந்து முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தார். ஒரே சுவரையும், ஒரே முகங்களையும், ஒரே இடத்தையும் ஐந்து வருடங்களுக்கு மேலாக இலக்கின்றிப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார். சாப்பாட்டை மூன்று வேளையும் சாப்பிட வேண்டும் என்ற சிந்தனையே இப்போது எழும்புவதில்லை. பசித்தால் மட்டும் இரண்டு நாட்களுக்கொரு முறையோ மூன்று நாட்களுக்கொரு முறையோ சாப்பிட்டுக் கொள் கின்றார். சாப்பிடாமல் இருந்து செத்துத் தொலைந்தால் என்ன என்ற ஆசை அடிமனதில் ஒட்டிக் கொண்டு தானிருக்கிறது. ஆசைப்பட்டுத் தான் என்ன பயன்? பசிக்கிறது என்று சொல்லி அடிவயிற்றில் கிளம்பும் அனலின் வெட்கை, மனதின் தீர்மானத்தைத் தூக்கி அடுப்பில் போட்டு விட்டு அவரைப் பார்த்து எள்ளி நகையாடுகிறதே? உணர்ச்சிகள் செத்து விட்டன என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தாலும் அவை அவ்வப்போது தம் உயிர்ப்பை அவருக்கு ஞாபகப் படுத்திக் கொண்டிருக்கத் தான் செய்கின்றன. பசிக்கவில்லை என்றாலும் அதையும் இதையும் என்று செய்து தந்து சாப்பிட வைத்து விடும் அன்பு மனைவி இங்கிருக்கிறாளா என்ன?

பசிக்கவில்லை என்று சொன்னால் "சாப்பிடு. உடம்பு கெட்டு விடும்" என்று வற்புறுத்திச் சாப்பிட வைக்க அங்கு யாரு மில்லை. அது அவர்கள் வேலையுமில்லை. உடல் சோர்ந்து விட்டால் அல்லது மயக்கமுற்று விழுந்து விட்டால் வைத்தியக் கவனிப்புக் கட்டாயம் இருக்கும். மன அழுத்தத்தைச் சரி செய்ய அவ்வப்போது மன நலமருத்துவர்கள் வந்து போய்க் கொண்டு தானிருக்கின்றார்கள். யார் வந்து கவனித்தென்ன? அவருடைய மனம் சீர் செய்ய முடியாத அளவுக்குத் தான் சிதைந்து போய் விட்டிருக்கின்றதே? எல்லாவற்றுக்கும் காரணம், தானே தான் என்று நினைக்கையில் வழமை போல் தன் மேல் சொல்ல முடியாத வெறுப்பு எழுந்தது. ஆத்திரத்தில் தன் தலையிலேயே " மடார், மடார்" என்று அடித்துக் கொண்டார். தலை விர்ரென்று வலிப்பது கூடத் தன் வேதனைக்கு சற்று மருந்தாய் அமைந்தாற் போலிருந்தது. இப்போது என்ன நேரம் இருக்கக் கூடும்? அது ஒரு கணப்பொழுது சிந்தனை மட்டுமே. பொழுது என்ன? நாள் என்ன? மாதம் என்ன? ஏன் வருடம் கூடச் சரியாகத் தெரியவில்லை. தெரிந்துதான் என்ன ஆகப் போகின்றது என்ற விரக்தியில் அவர் கலண்டரைக் கூடப் பார்ப்பதில்லை. எனக்கு இப்போது என்ன வயதாகி இருக்கக் கூடும்? ஐம்பத்தைந்து இருக்கக் கூடுமா? இருக்கும். கோலாகலமாய் அவரது ஐம்பதாவது பிறந்த நாள் நடந்து ஐந்து வருடங்கள் ஆகி விட்டிருக்கக் கூடும். இப்போதெல்லாம் எல்லா நாட்களும் ஒரே மாதிரியாய்த்தான் இருக்கின்றன. சூரியன் எழுவதும் மறைவதும் மட்டுமே அவர் கணக்குக்குத் தெரிந்ததொன்று. அவரது சிறுவயதுப் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமளா யோகேஸ்வரன்

பெரிதாகக் கொண்டாடப்பட்டதான எந்த ஞாபகமும் அவர் நினைவில் இல்லை. ஆனால் வெளிநாடுகளில் நாற்பதாவது பிறந்த நாளில் தொடங்கி ஒவ்வொரு பத்து வருடத்துக்குமான பிறந்த நாட்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழமை. இன்றும் அவரது ஐம்ப தாவது பிறந்த நாளையும், அன்பு மனைவி செல்வியையும் நினைத்தாலே கண்கள் கசியத் தொடங்கி விடுகின்றன.

வழமையாகப் பிறந்த தினம் வருகின்றது என்றால் மனைவி முதல் நாளே கேக் செய்து அதற்கான அலங்கரிப்பு வேலைகளையும் செய்யத் தொடங்கி விடுவாள். அந்த முறை எந்த ஏற்பாட்டையும் காணவில்லை என்றவுடன் செல்வி மறந்து விட்டாளோ என்று தான் தோன்றியது. படுக்கையில் மனைவியின் வாழ்த்துக் கிடைக்காததில் எதையோ இழந்தாற் போல இருந்தது. வரவர என் முக்கியத்துவம் குறைந்து கொண்டு போகின்றதோ என்று தோன்றியது. மூத்தவள் பல்மருத்துவ பீட இறுதியாண்டு மாணவி. மகன் மருத்துவபீடத்துக்குத் தெரிவாகி இருந்தான். நானும் என் உழைப்பும் இனிமேல் எதற்கு? சலிப்புடன் நினைத்துக் கொண்டே பற்களைத் துலக்கி விட்டு வந்து சாப்பாட்டு மேசையில் அமர்ந்து கொண்டார். தேநீரைக் கொடுத்த மனைவி அப்போதாவது ஏதாவது சொல்லுவாளோ என்று உற்றுப் பார்க்க, அவள் அவர் முகத்தையே பார்க்காமல் நகர்ந்து விட்டாள். உண்மையில் மறந்து தான் விட்டாள் என்ற எண்ணம் உள்ளுக்குள் வலிக்காமலில்லை. பிள்ளைகளும் வாழ்த்தவில்லை என்றவுடன் அந்த வலி இன்னமும் அதிகரித்தது. ஐம்பதாவது பிறந்த நாள். நண்பர்கள் கூட வாழ்த்தவில்லையே என்ற கவலையும் வேறு சேர்ந்து கொண்டது. சனிக்கிழமை மாலை என்றால் அவரும் செல்வியும் கோயிலுக்குப் போய் விட்டு வருவது வழமை. அதற்கும் அன்று செல்வி வர மறுத்து விடவே சுர்ரென்று ஒரு கோபம் பொங்கியது. கணவனின் பிறந்த நாளன்று ஒரு அர்ச்சனை செய்யும் வழமையைக் கூட மறந்து விட்டி ருக்கிறாள்.

ஒன்றும் பேசாமல் கோயிலுக்குக் கிளம்பி விட்டார். பூஜை முடிந்தும் அவருக்கு வீட்டுக்குத் திரும்ப மனம் வரவில்லை. கோயிலைக் கூட்டிக் கொண்டு, விளக்குகளைக் கழுவிக் கொண்டு நேரத்தைப் போக்காட்டிக் கொண்டிருந்தார். அதற்குள் மகளிடமிருந்து இரண்டு அழைப்புகள் வந்து விட்டிருந்தன. மகள் மீது அவருக்குக் கொள்ளைப் பிரியம். அவளை அடுத்த அழைப்பை எடுக்க வைத்து விட வேண் டாமே என்றுதான் இறுதியில் வீட்டுக்குக் கிளம்பி விட்டார். பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் தான் வேண்டாதவனாகிப் போகிறோமோ என்ற சிந்தனை அவருக்குள் ஓடிக் கொண்டே தானிருந்தது. காரை கராஜில் விட்டு விட்டு இறங்கிக் கதவைத் திறந்த அடுத்தகணம் "ஹப்பி பேர்த்டே" பாடியபடி முப்பதுக்கும் மேற்பட்ட குடும்ப நண்பர்கள் சுமணனை வரவேற்றார்கள். அவர்கள் உள்ளே இருந்ததற்கான எந்த அறிகுறியும் வெளியில் தெரியவில்லை. அதிர்ச்சி, மகிழ்ச்சி என்ற உணர்வுக் கலவைகளுடன் பேச்சின்றித் திகைத்துப் போய் நின்று விட்டார் சுமணன். மனைவியை ஒரு பெருமிதமான புன்னகையுடன் பார்த்துக் கொண்டார். வேட்டியுடன் சுமணன் அந்த வயதுக்குரிய களையுடன், மனைவி பிள்ளைகளுடன் எடுத்துக் கொண்ட குடும்பப்படம் இன்றும் முன் ஹாலில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடும்.

வீட்டைப் பற்றி எண்ணிய பொழுதில் மனம் உடையத் தொடங்கி விட்டிருந்தது. கண்களில் கண்ணீர் வற்றி விட்டதால், கண்களில் இருந்து இப்போதெல்லாம் கண்ணீர் வருவதில்லை. அழகிய பறவைகளின் கூடாக எத்தனை அழகாக இருந்தது என் குடும்பம்? அதைக் கலைத்து சின்னாபின்னாமாக்கி, எல்லோரையும் தொலைத்து விட்டு இப்போது வர மறுக்கும் மரணத்தை இருகரம் கொண்டு வரவேற்று நிற்கும் நிலை எனக்கு ஏற்பட்டிருப்பதேன்? அந்த ஒரு நாளை மட்டும் என் வாழ்வில் இருந்து அகற்றி விட்டால், என் வாழ்க்கை இன்றும் பசுமையானதாய் இருந்திருக்க மாட்டாதா? என்ன பாவம் செய்தேன் என்று எனக்கு உயிரோடு இவ்வளவு பெரிய தண்டனையைத் தந்தார் இறைவன்? அந்தக் கரிநாள் நினைவுகளை ஞாப கப்படுத்த வேண்டிய தேவையிருக்கவில்லை. அந்த நாளை மனதில் இருந்து மறந்து விட்டால் தானே நினைத்துப் பார்ப்பதற்கு?

ஒரு நண்பனின் அறுபதாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தை முடித்து விட்டு சுமணனும் செல்வியும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். சுமணன் குடித்திருந்ததால் வண்டியோட்ட முடியவில்லை. செல்வியே வாகனத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள். ஒரு இடத்தில் சிவப்பு சிக்னலில் வண்டியை ஓட்ட முற்பட்டு இறுதி நிமிடத்தில் காரை நிறுத்தி இருந்தாள். இன்னொரு இடத்தில் வண்டி பக்கத்து லேனுக்குள் புகுந்து கொள்ளப் பார்த்து விட்டிருந்தது. "என்ன செல்வி? எனக்குத் தான் வெறி. நீயும் தண்ணிய டிச்சனியே?" கொஞ்சம் உள்ளுக்குள் போனால் சுமணனின் இயல்பே மாறிவிடும். நன்றாகப் பகடி விடுவார். தேவையில் லாமல் பெரிதாகச் சிரிப்பார். செல்வி அவர் குடிப்பதற்கு தடை போடாததற்கு அதுவும் ஒரு காரணம். மன அழுத்தத்தை மறந்து சிரிக்கின்றாரே என்று எண்ணிக் கொள்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமளா யோகேஸ்வரன்

செல்வியிடம் இருந்து ஒரு பதிலும் வரவில்லை என்றவுடன் சுமணனுக்குச் சப்பென்றானது.

"என்ன வாய்க்குள்ள கொழுக்கட்டையே? என்னப்பா நடந்தது?"

"அம்மாவுக்குக் கொஞ்சம் சீரியசாம். ஒப்ரேசன் ஒன்றையும் தாங்கிற நிலைமையில் அவர் இல்லை. வெளிநாட்டில இருந்து எடுப்பிச்ச மருந்தைத் தான் கொடுக்கப் போறினமாம். அண்ணா பாவம். இலங்கை இப்ப இருக்கிற நிலைமையில கையில காசும் கனக்க இருக்காது." செல்வியின் குரலில் தாயைப் பற்றிய கவலை அதிகமாகவே தொனித்தது.

"செல்வி, நீ வீட்டுக்குக் காசு அனுப்பச் சொன்னதை நான் மறந்தே போனன்." நிலைமையின் தீவிரம் புரிந்ததில் சுமணனின் குரலில் வெறி சற்று முறிந்திருந்தது.

"என்னது? வீட்டுக்கு இன்னும் காசு அனுப்பேல்லையோ? எத்தனை தரம் சொன்னனான். ஏன் அனுப்பேல்லை?" வீட்டின் ஏழ்மை நிலைமை தெரிந்தவள் ஆகையால் செல்வியின் குரலில் அதிர்ச்சி இருந்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தாயின் மருத்துவச்செலவுக்காக அண்ணன் தன்னிடம் கேட்க விரும்பாமல் அங்குமிங்கும் அலைந்து அல்லற்பட்டிருப்பார் என்பது செல்விக்குத் தெளிவாகவே புரிந்தது.

கார் அதிக வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது சுமணனுக்குப் புரிந்தது. செல்வியின் கோபம் காரின் வேகமாக வெளிப்படுவதும் தெரிந்தது. தன் மேல் பிழை இருந்ததால் சுமணன் எதுவும் பேசவில்லை. நல்லவேளையாக ஐந்து நிமிடத்துள் வீடு வந்து விட்டிருந்தது. காரை நிறுத்திய கையோடு தன் வீட்டுக்கு அழைப்பு எடுத்தாள். யாரும் எடுக்கவில்லை என்றவுடன் கவலையும் கணவன் மேல் கோபமும் சேர்ந்தே வந்தன.

"என்ன வாழ்க்கை வாழுறன்? பிச்சைக்காரச் சீவியம்" சொல்லிக் கொண்டே இறங்கிய செல்வியின் வார்த்தையில் சுமணனுக்குச் சுர்ரென்று கோபம் ஏறியது.

"என்ன சொன்னாய்? திரும்பச் சொல்லு பார்ப்பம். இருந்த இருப்பு மறந்து போச்சோ? நீங்கள் காசுக்கு வழியில்லாத பிச்சைக்காரர் தானே?" உள்ளே போன சரக்கு பேசியது.

"நானும் உழைக்கிறன், அம்மாக்குச் சுகமில்லை என்று காசு அனுப்பச் சொன்னால் அதை மறந்து போட்டன் என்று ஆறுதலா சொல்லுறியள். அண்ணா அங்க யாரிட்ட காசு வாங்கிக் கஷ்டப்படுதோ தெரியேல்லை. ஏன் பெண்ணாய் பிறந்தேனோ தெரியேல்லை. ஏன் இப்படி ஒரு மனிசனைக் கட்டிக் கஷ்டப்படுறனோ தெரியேல்லை." அன்னையின் உடல் நலம் பற்றிய கவலையில் செல்வியின் வார்த்தைகள் கொஞ்சம் தடித்தே வந்தன.

"என்னடி கதைக்கிறாய்? உங்கட வீட்டுக்குக் காசு கொடுக்க வேணும் என்று எனக்கு ஒன்றும் கட்டாயம் இல்லை. பொம்பிளை கொடுத்த இடத்தில் இருந்து காசு கேட்க உன்ர வீட்டுக்காரர் தான் வெட்கப்படோணும்."

"நாங்கள் ஏன் வெட்கப்படோணும், நீங்கள் தான் வெட்கப் படோணும். உங்கட வீட்டுக்கு நினைச்ச நேரம் எல்லாம் காசு அனுப்புறியள். நான் என்றைக்காவது கேட்டு இருக்கிறனோ? பெற்றவர்களுக்குச் செய்யிற கடமையில ஆண், பெண் என்றெல்லாம் வேறுபாடு இல்லை." சொல்லியபடியே தலையைப் பிடித்துக் கொண்டு நிலத்தில் அமர்ந்து கொண்டாள்.

"கதைக்கிறதை யோசிச்சுக் கதை. எனக்கு விசர் வந்தால் என்ன செய்வன் என்றே தெரியாது."

"என்னத்தைச் செய்து கிழிப்பியள்? சொல்லுங்கோவன் கேட்பம்" சுமணன் ஒரு நாளும் மனைவியுடன் பெரிதாகப் பிரச்சனைக்குப் போனதில்லை. செல்வி அந்தத் துணிவில் வம்புக்கு நின்றாள்.

"என்னவும் செய்வன். உன்னைக் கொன்றும் போடுவன். என்னைக் கேட்க இங்க ஆளில்லை" உள்ளே போயிருந்த பார்ட்டிச் சரக்கு அவரைப் பேச வைத்தது.

"சொன்ன வேலையைச் செய்யத் துப்பில்லை. இதில தான் உங்கட ஆம்பிளைத் தனத்தைக் காட்டப் போறியளே?" செல்வி சொன்னதைக் கேட்க ஆத்திரம் தலைக்கேறியது. கையை எட்டி சாப்பாட்டு மேசையில் அப்பிளை நறுக்க வைத்திருந்த கத்தியை எடுத்துக் கொண்டார். தன்னில் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கும் செல்வியைச் சும்மா பயமுறுத்தி வாயை மூட வைக்கத் தான் கத்தியைக் கையில் எடுத்தார்.

"என்னடி நானும் பார்க்கிறன், வாய் நல்லா நீளுது. உன்ர அம்மாவுக்கு வயசு தொண்ணூறு. படுக்கையில கிடத்தி, மூத்திரம் துடைச்சுப் பார்த்து அவாட உயிரைக் காப்பாற்றிப் போட வேணும் என்று கேட்கிறியே? செத்துப் போகட்டும். ஒருத்தரும் கவலைப்பட மாட்டம். இனிமேல் ஒரு சொல்லுக் கேட்கக் கூடாது. கேட்டால் கத்தி தான் இனிக் கதைக்கும்." சுமணனுக்கு உள்ளே போனது ஒழுங்காக நிற்கக் கூட விடமாட்டேன் என்றது. ஆடியபடியே கத்தியை ஆட்டிக் கொண்டு பேசினார். பாரம்பரியமாக ரத்தத்தில் உறங்கி இருந்த ஆணாதிக்க மனப்பான்மை இப்போது குடி தந்த தைரியத்தில் விழித்துக் கொண்டு பேச வைத்தது.

"நீங்களும் ஒரு மனிசனே? உங்களைக் கட்டி நான் என்ன நிம்மதியைக் கண்டேன்? உங்கட அம்மாவையும் இப்படி நினைச்சுத் தான் சாக விட்டனியளே?" தாயைப் பற்றிய வேதனையில் தான் செல்வியின் வார்த்தைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமளா யோகேஸ்வரன்

சூடாயிருந்தன.

"உன்னை வாயை மூடச்சொன்னனான்." சொல்லியபடி நிலத்தில் இருந்த செல்வியின் வாயை நோக்கி கத்தியைக் காற்றில் கீறினார் சுமணன். செல்வி சட்டெனத் தலையை பின்னால் இழுத்துக் கொள்ள அது செல்வியின் கழுத்தைப் பதம் பார்த்தது.

"எல்லாம் உனக்கு நான் தந்த இடம் தான். இனிமேல் நீ என்ர வீட்டில இருக்க வேண்டாம். வெளியில போடி." சுமணன் இன்னும் ஏதேதோ கத்திக் கொண்டிருந்த போதும் செல்வி பதிலேதும் சொல்லவில்லை. பேச்சை வளர்த்துத் தூபம் போட எதிர்ப்பேச்சு வராததில் சுமணன் அடங்கிப் போய் சோபாவில் சாய்ந்து கொண்டார்.

ஒரு பத்து நிமிடம் தாண்டிய பின்னர், கோபம் கொஞ்சம் அடங்கியிருந்தது. அப்போதும் செல்வி எழுந்திருக்கவுமில்லை. உடுப்பை மாற்றவும் இல்லை.

"போதும் நீ காட்டின படம். நான் காசை அனுப்பி வைக்கிறன், எழும்பி ஒரு ரீ போடு. தலையிடிக்குது." சுமணன் சொன்ன போதும் செல்வி அசையவில்லை.

"செல்வி எழும்பு. செல்வி எழும்பன்" என்று இரண்டு தரம் சொல்லியும் அசைவில்லை என்றவுடன் எழும்பிப் பக்கத்தில் வந்து செல்வியைத் தொட்டு அசைக்க, அவளின் உடல் அப்படியே நிலத்தில் சரிந்தது. அவளைச் சுற்றி ரத்தம் பெரிய குளமாகக் கட்டி நின்றது.

"செல்...வி." அதிர்ச்சியில் பேச்சு வர மறுத்தது. போட்டிருந்த மதுவின் பாதிப்பு முற்றிலுமாய் வடிந்து போய் சுயநினைவு வந்தாற் போன்றிருந்தது. மனைவியைக் கொன்று விட்டோமா? இல்லை. இல்லை. செல்வி என்னைப் பயமுறுத்துவதற்காக நடிக்கிறாள். மயக்கமாய் இருக்கக் கூடும் என்ற ஒரு எண்ணம் மனதில் நம்பிக்கையை விதைக்க, அம்புலன்சுக்குப் போன் எடுத்தார். பதட்டத்தில் மூன்று சைபர்களுக்குப் பதிலாக நான்கு சைபர்களை மூன்று தரம் பிழையாக அழுத்திய பின்னர் ஒரு மாதிரியாக அழைப்பு சென்று சேர்ந்தது.

விடயத்தைச் சொல்லி அம்புலன்சைக் கோரினார். கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. மூச்சு வருகிறதா என்று கேட்ட போது அவளைத் தொட்டுத் திருப்பி மூக்கில் கையை வைத்துப் பார்க்கவே அச்சமாய் இருந்தது. மூச்சு இல்லை என்றால் என்ன செய்வது? அசைகிறாரா, பேசுகிறாரா என்ற எல்லாக் கேள்விக்கும் அழுகையே பதிலானது. வீட்டு விலாசத்தைக் கேட்டு எடுத்துக் கொண்ட பின்னரும் அழைத்தவர் தொடர்பிலேயே இருந்து என்னென்னமோ கேட்டுக்கொண்டிருந்தார். பதிலேதும் சொல்ல முடியாமல் சுமணனின் மனம் சொல்லொணா அதிர்ச்சியில் குழம்பிப் போயிருந்தது.

செல்வியைக் கொன்று விட்டோமா? என் மனைவியை நானே என் கையால் சொன்று விட்டேனா? இருக்காது. மயங்கிப் போயிருக்கிறாள். வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சரியாக்கித் தந்து விடுவார்கள். இனிமேல் சண்டையே பிடிக்க மாட்டேன். சாகும் வரையில் மதுவைத் தொடவே மாட்டேன் என்றெல்லாம் மனம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டிருக்கையில் அம்புலன்ஸ் வந்து சேர்ந்தது.

அதன் பின்னர் செல்வியின் மரணம் உறுதிப்படுத்தப்பட்டு, காவற் துறையினர் வரவழைக்கப்பட்டது எல்லாம் கனவில் நடந்தாற் போன்று இருந்தன. விசயம் தெரிந்து இரண்டு பிள்ளைகளும் வந்து விட்டிருந்தனர். அம்மாவுக்காக அழுவதா அல்லது அப்பாவுக்காக அழுவதா என்பது தெரியாமலே இரண்டு பிள்ளைகளும் கதறி அழுவதை சுமணன் வெறித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தார்.

மகன் தாயில் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறான் என்பது சுமணனுக்குத் தெரியும். அவர்களின் பாசப்பிணைப்பைக் காணும் போதெல்லாம் தம்மில் குழந்தைகள் இத்தனை பாசம் வைத்திருக்கவில்லையே என்பதும் தோன்றும். மகனுக்குப் பிடித்ததை செல்வி விழுந்து விழுந்து செய்வதும், அவன் வீட்டுக்கு வந்ததும் தாயின் மடியில் படுத்துக் கொண்டு கதை பேசுவதும் பொறாமையை உண்டாக்கும். தாயின் சொல்லை என்றும் மகன் தட்டி நடந்ததுமில்லை. தாய்க்கு வேதனையை உருவாக்கக் கூடிய எந்தச் செயலையும் பருவ வயதுப் பாதிப்பில் மகன் செய்ததுமில்லை. அப்படிப் பாசமுள்ள அன்னையை ஒரு நாளைக்குள் உயிரற்ற உடலாகப் பார்ப்பது அவனுக்கு எவ்வளவு வேதனையை உண்டாக்கும் என்பதை சுமணனால் உணர முடிந்தது. அதுவும் தந்தையே அவன் உலகை வெற்றிடமாக்கி இருக்கிறார் என்பதில் தன்னை எவ்வளவு வெறுத்திருப்பான் என்றும் ஊகம் செய்ய முடிந்தது. மகள் பக்கத்தில் வராமல் அழுது கொண்டிருந்தாலும் தன்னைப் பார்த்த பார்வையில் ஒரு வேதனை தெரிவதை உணர்ந்து கொண்டார்.

அதற்குள் காவற்துறையினர் அவரை வண்டியில் ஏற்றி விட்டிருந்தனர். நினைவும் இன்றி, கனவும் இன்றிய நிலையில் மணித்தியாலங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமளா யோகேஸ்வரன்

காவற்துறையினர் கேட்ட கேள்விகளுக்கு எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை.

நானா கொன்றேன், நேற்று வரை அமைதியாகப் போய்க்கொண்டிருந்த வாழ்வு ஒரு நாளில் எப்படித் தலை கீழானது? சாகும் வரையில் காப்பேன் என்று உறுதி கூறி ஏற்றுக் கொண்ட மனைவியை நானா கொன்றேன்? என்னைக் கருத்துடன் பார்த்துக் கொண்டு, என் சுகதுக்கங்களில் பங்கு கொண்ட மனைவியை நானா என் கைகளால் கொன்றேன்? நினைக்க நினைக்க ஆறாத ஆத்திரத்தில் கைகளை சுவரில் அறைந்து கொண்டதில் கைகளில் இருந்து ரத்தம் வடிந்தோடியது. இது வரை பேசாததெற்கெல்லாம் சேர்த்து இப்போது வாய் விட்டுச் சொல்லிக் குமுறிக் குமுறி அழத் தொடங்கினார் சுமணன். இவர் தமிழில் சொல்லி அழுததை வெள்ளைக்காரனால் புரிந்து கொள்ள முடியாவிடினும் இவரின் வேதனையைப் புரிந்து கொண்டார்கள்.

வைத்தியர் காயத்துக்கு மருந்து போட்டு விட்டு, மனநல மருத்துவரின் ஆலோசனையை அணுகச் சொன்னார். கடும் மனச்சிதைவுக்குள்ளான அவரால் மனைவியின் இறுதிக்காரியங்களில் அமைதியாகப் பங்கு பற்ற முடியாது என்ற வைத்தியரின் கருத்தை ஏற்றுக் கொண்டு, கட்டிய மனைவியின் முகத்தைக் கடைசி முறையாகக் காணும் சந்தர்ப்பமும் மறுக்கப்பட்டது. தீயோடு சங்கமமாய் இருப் பாள் அன்பு மனைவி என்ற எண்ணம் அவரை உலுக்கியதில் தனிமையில் புலம்பித் தீர்த்தார். அதிகாரிகளிடம் தன்னைத் தூக்கில் போட்டு விடுமாறு கெஞ்சிக் கேட்டார். உணவின்றித் தூக்கமின்றி அவர் அழுது கொண்டே இருந்தது சிறை அதிகாரிகளின் மனதையே உருக்கியது.

இரண்டு நாட்கள் கழித்துப் பிள்ளைகள் இருவரும் வந்து பார்த்தபோது குற்ற உணர்ச்சி கொன்று போட்டதில் ஒற்றை வார்த்தை கூட அவர்களுடன் பேச முடியவில்லை. அன்பான அன்னையைக் கொன்று இறுதியில் பெற்றோரற்ற அநாதைகளாய் நிற்கும் அவர்களின் நிலை அவரை மௌனியாக்கியது. மகள் கூப்பிட்ட போதும் தலையை நிமிர்த்திக் கூட பார்க்கவில்லை. தூரத்தில் நடை தளர்ந்து செல்லும் பிள்ளைகளின் முதுகைப் பார்த்தவாறு அழுது தீர்த்தார். எப்படி வாழப் போகிறார்கள்? யார் இவர்களை இங்கே பார்த்துக் கொள்ளப் போகிறார்கள்? ஏன் பெற்ற குழந்தைகளை இந்நிலையில் கொண்டு வந்து விட்டேன்? பாவி நான் என்று சொல்லித் தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

அவருடைய மனநிலை, கொலை செய்த போது அவர் குடித்திருந்தமை என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவருக்கு இருபத்தைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஒரு நிமிடம் ஆட்கொண்ட சினத்தின் விளைவு தன் வாழ்நாளையே சிறையில் கழிக்க வைக்கும் என்று அவர் நினைத்தே பார்த்திருக்கவில்லை. அழகான குடும்பம் அலங்கோலமாய் ஒரே நாளில் சிதறுண்டு போனது. பெற்ற பிள்ளைகள் உட்பட தன்னை யாரும் பார்க்க வருவதை அவர் இப்போது விரும்புவதில்லை. தன் பாவ நிழல் அவர்கள் மேல் விழுந்திட வேண்டாம் என்று எண்ணிக் கொண்டார்.

இந்த ஐந்து வருடத்தில் மகள் மணமுடித்திருந்தாள். பெற்றோர் தத்தம் செய்து கொடுக்காமல் வேறு யாரோ நின்று செய்து முடித்திருக்கக் கூடும். ஒரு வயதில் பேத்தி இருக்கிறாள் என்பதை அவரைப் பார்க்க வந்த ஒரே நண்பர் சொல்லக் கேட்டு அறிந்து கொண்டார். செல்வியே மகள் வயிற்றில் வந்து பிறந்திருக்கக் கூடும். கடைசியாய் மனைவியின் முகத்தைப் பார்க்கவில்லை. இப்போது பேத்தியின் வடிவில் மனைவியைக் காணலாம் என்றாலும் கேட்கத் துணிச்சல் வரவில்லை. மகனைப் பற்றிக் கேட்ட போது பதில் ஏதும் சொல்லாமல் அழுது தீர்த்த நண்பனிடம் அதற்கு மேல் அக்கறையாக மகனைப் பற்றிக் கேட்கத் தோணவில்லை. இப்போது மருத்துவராக எங்காவது பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடும். கல்யாணத்துக்குத் தயாராகி இருக்கக் கூடும். பெற்றோராய் எம் கருமங்களை முடிப்பதற்கு கொடுத்து வைக்கவில்லையே. இப்போது சுகநலன் கேட்டுத் தான் என்ன பயன்? என்னால் தான் எல்லாமே. நினைக்கையில் இதயம் இன்னும் இற்றுப் போய் நொருங்கும்.

'இறைவன் என்றொருவர் இருப்பாராயின் அவரிடம் கேட்பது இப்போது ஒன்று மட்டுமே. பெற்றோர் இல்லை என்று ஏற்றுக் கொண்டு வாழப் பழகி விட்ட பிள்ளைகளின் கண் முன்னால் இனிமேல் போய் நிற்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு என்னைத் தள்ளி விடாதே. நான் செய்த பாவத்துக்கு, நான் அனுபவித்த தண்டனை போதும் என்றால் என் முடிவை இங்கேயே எழுதி விடு.' வேண்டிக் கொண்டே மெல்ல எழுந்து கொண்ட அவரைப் பார்த்து விதி மீண்டும் சிரித்தது.

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் வேல்

# செல்வாக்கு



கதிரேசனின் குடும்பம் மும்முரமாக தமது வீட்டினைத் துப்பரவாக்கும் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. கடந்த சில நாட்களாக பெய்த அடை மழை வெள்ளம் அவர்களது வீட்டினை ஆக்கிரமித்தபோது அருகிலிருந்த பாடசாலை மண்டபத்தில் தஞ்சமடைந்திருந்தவர்கள் வெள்ளம் வடிந்ததும் பதினொரு நாட்களின் பின் தமது குடிசை வீட்டினைத் துப்பரவு செய்து மீளவும் குடிவர ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு மழை காலத்திலும் இடம்பெயர்வதும் வெள்ளம் வற்றியதும் வீட்டுக்கு வருவதும் கடந்த எட்டு வருடங்களாகத் தொடரும் அக்குடும்பத்தின் அவலமாகும் அயலிலுள்ள எல்லோரும் வீட்டுத்திட்டத்தைப் பயன்படுத்தி தமக்கென ஒரு வீட்டை அமைத்தபோது, தமது நிலத்தை ஓரளவு மண் நிரப்பியதால் மழைக்காலத்திலும் இடம்பெயராது வாழ்ந்து வருக்கிறார்கள். எனினும் கதிரேசனின் வருமானமானது அதற்கெல்லாம் கைகொடுக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்படும் போதெல்லாம் அவனது கோரிக்கை பின்தள்ளப்பட்டு வல்லமையுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுக்கொண்டு வருவது வழமையாகிவிட்டது. அடிக்கடி கிராம அலுவலரைச் சந்தித்து தனது பிரச்சினையைக் கூறும் போதெல்லாம் அவனுக்கு உறுதி மொழி வழங்கப்படுவதும் பின்னர் அவ்வுத்தியோகத்தருக்கு அப்பாற்பட்ட வகையில் அவ் வாய்ப்பு தட்டுப்பட்டுப் போவதுமாக இருந்தது. கதிரேசன் ஏழ்மையின் உதாரணம். ஆனாலும் சிறந்த உழைப்பாளி. மூன்று பிள்ளைகள் மனைவி என ஐந்து பேரைக் கொண்ட குடும்பம் அவனது குடும்பம். கூலி வேலை அவனது வருமான மார்க்கம். அவனது வருமானம் குடும்பத்தின் நாளாந்தச் செலவுக்கே போதுமாக இருந்தது. மனைவி தனது கணவனை மிகவும் நேசிப்பவள். தனது கணவனின் வருமானத்தில் சிறுகச் சேமித்து பண்டிகைக் காலங்களில் தமது நிலைக்கேற்ப செலவு செய்து குடும்பத்தையே ஓரளவு திருப்தியாக வைத்திருக்கும் இல்லத்தரசி. எவ்வித கெட்ட பழக்கமுமற்ற கணவனை நினைத்து அவள் பெருமையடைந்தாலும் மேலதிக செலவுகள் அவ்வப்போது ஏற்படும் போதெல்லாம் மிகவும் நொந்து போவாள் தமது நிலையையெண்ணி. தனது மூன்று பிள்ளைகளும் படித்து சிறப்பாக வாழ வேண்டும் எனும் நோக்கில் கல்விக்குத் தேவையான செலவுகளையும் அக்குறைந்த வருமானத்திலேயே சமாளித்துக் கொண்டிருப்பவள். சொந்தமாக சிறிய நிலம் ஒன்றில் குடிசை வீடொன்றில் வசித்து வரும் அக்குடும்பம் மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் வேல்

காலத்தில் அல்லோல கல்லோலப்படும். சொந்த நிலமாயினும் தாழ்வான பகுதியில் அவர்களது காணி அமைந்திருந்ததால் வெள்ளம் தேங்கி நிற்கும். அயல் வீடுகளும் பள்ளக்காணியில் அமைந்திருந்தாலும் பெரும்பாலானோர் கல் வீடுகளையே அமைத்திருந்தபடியால் மழைக்காலங்களிலும் பாதிப்பின்றி வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அவனது கடந்த காலமும் கஸ்ரங்கள் நிறைந்ததாகவே அமைந்திருந்தது. வன்செயல் காலத்தில் தனது தாயாருடனும் இரு தங்கைகளுடனும் கிளிநொச்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்திருந்த கதிரேசன் அங்கு தமது குடும்ப நிலையறிந்து ஒரு முதலாளியின் கீழ் பணியாற்றினான்.. அம்முதலாளி அவனது வேலைத்திறனையும் நேர்மையையும் கண்டு அவனைத் தனது விசுவாசமுள்ள ஊழியனாகவே வைத்திருந்தார். தனது வருமானத்திலேயே தாயையும் தங்கைகளையும் பராமரித்து வந்த கதிரேசன் தங்கைகளை திருமணம் செய்து வைக்க என்ன செய்யப் போகின்றோம் என்ற கவலை தினமும் வாட்டியது. அவனது தாயாரும் வயது வந்த பிள்ளைகளை எப்படிக் கரை சேர்க்கப் போகின்றோம் என்ற தனது கவலையை மகனுடன் பகிர்ந்து கொள்வாள். பொருளாதார உதவி செய்யுமளவில் அவனது உறவினர்கள் யாரும் இல்லை. வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் உறவினர்களும் கதிரேசன் குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டி வரும் என நினைத்தோ என்னவோ அவர்களுடன் சொந்தம் கொண் டாடுவதில்லை.

தமையனின்தனி வருமானத்தில் தமது குடும்பம் அல்லாடுவது கண்டு கதிரேசனின் தங்கைகள் தமக்கும் ஏதாவது வேலை பெற்றுத் தருமாறு கதிரேசனைக் கேட்ட போதும் தனது தங்கைகள் கஸ்டப்படக்கூடாதென முற்றாக மறுத்து விடுவான். இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த வாழ்வில் அப்பிரதேசத்தில் பரவியிருந்த மலேரியாக் காய்ச்சலால் கதிரேசனும் பாதிக்கப் பட்ட போது பல நாட்கள் வருமானமின்றி அக்குடும்பம் அவஸ்தையடைந்தது. வேறு வழியின்றி கதிரேசனின் தங்கைகள் அவனது முதலாளியிடம் வேலை கேட்டு சென்றனர். கதிரேசன் மீதுகொண்ட நன்மதிப்பு காரணமாக அவனது முதலாளி வேலை எதுவும் கொடுக்க சம்மதிக்காமல் கதிரேசன் சுகமடைந்து வந்து வேலை செய்து கழிக்கலாம் என தேவையான பண உதவி செய்து வந்தார்.

படிப்படியாக கதிரேசன் சுகமடைந்து மீண்டும் வேலைக்கு சென்று கொண்டிருந்தான். அவனது வேலையின்பால் திருப்தி கொண்ட அவனது முதலாளி அவனுக்கான சம்பளத்தை சிறிது உயர்த்தியிருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக தனது முதலாளியிடம் பெற்ற கடனை அடைத்தவன், முதலாளியின் ஆலோசனையின்பேரில் தனது பெயரில் ஒரு வங்கிக் கணக்கினைத் திறந்து அதில் கொஞ்சம் சேமிப்பினை செய்து வந்தான். இவ்வாறாக சென்று கொண்டிருந்த அவர்களது வாழ்வில் திருப்பமாக அமைந்தது அந்த நாள் . ஆம் அவன் வேலை முடித்து வீட்டுக்கு வந்து குளித்தபின் மூத்த தங்கை தந்த தேனீரை அருந்தியவாறு திண்ணையில் அமர்ந்திருக்க அவனை யாரோ பெயர் சொல்லி அழைத்தனர். வெளியே சென்று பார்த்த கதிரேசன் தன்னது முதலாளியின் கீழ் வேலை செய்யும் தயா எனும் இளைஞனும் தாயும் தந்தையும் வந்திருப்பதை கண்டவன் இவர்கள் ஏன் வந்தார்கள் எனும் யோசனையுடன் அவர்களை உள்ளே அழைத்தான் உள்ளே வந்த அவர்களைத் தாயாருக்கு அறிமுகப்படுத்தியவன் வந்தவர்கள் அமருவதற்காக கதிரைகள் எதுவும் இல்லாத நிலையில் திண்ணையில் அமருமாறு வேண்டினான். மூத்த தங்கை வீட்டிலிருந்ததில் நல்ல பாய் ஒன்றனை விரிக்க அதில் அவர்கள் அமர்ந்து கொண்டார்கள். பல கதைகளையும் பேசிக்கொண்டிருந்த அவர்களுக்கு தங்கை தேநீர் வழங்கினாள். தேனீரை அருந்தியபின் கதிரேசனின் மூத்த தங்கையை தமது மகன் தயாவுக்கு பெண் கேட்டனர். தங்களது பொருளாதார நிலையையுணர்ந்த கதிரேசனின் தாயார் முதலில் அதை மறுத்த போதும் தயாவின் பெற்றோர் வற்புறுத்தலாலும் அவர்கள் எவ்வித சீதனத்தையும் எதிர் பார்க்கவில்லை என்பதாலும் அத்திருமணத்தில் தங்களது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டனர். தங்கைக்கு திருமணம் அமைந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த கதிரேசன் தன்னிடமிருந்த சொற்ப சேமிப்புடனும், தனது முதலாளியினது உதவியுடனும் தங்கையின் திருமணத்தை எளிமையாக நிறைவேற்றினான்.

நாடு ஓரளவு சீரடைந்ததும் மீள்குடியேற்றத்திற்காக சொந்த ஊருக்கு தனது தாயாருடனும் தங்கையுடனும் வந்தவன் தனது சிறிய நிலம் ஒன்றில் விவசாயத்தில் ஈடுபட்டும் ஊரில் கூலி வேலை செய்தும் தமது வாழ்க்கையை ஓட்டி வந்தான். மூத்த தங்கையைப் போலவே இளைய தங்கைக்குத் திருமணமாகி கணவருடன் தனிக்குடித்தனம் சென்றுவிட தனது தூரத்து உறவான பெண்ணைக் கரம் பற்றி இல்வாழ்க்கையில் நுழைந்தான். மனைவியிடமிருந்து எதுவித பொருளாதார எதிர்பார்ப்பையும் கொண்டிராத கதிரேசன் தனது சொந்தக் காணியிலேயே சிறிய வீடொன்றை அமைத்து வாழ்ந்து வருகிறான்.

இடம் பெயர்ந்து சென்று வந்தவர்களுக்கெல்லாம் வீட்டுத்திட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் வேல்

தின் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாட்டினைச் செய்கின்ற போதிலும் செல்வாக்கு மிக்க வர்கள் முன்னுரிமை பெற்று அப்பயனைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். கட்டம் கட்டமாகக் கிடைத்துவரும் வீட்டுத்திட்டமும் கதிரேசனுக்கு எட்டமாக உள்ளது. இடம் பெயர்வின் பின் மீளக் குடியமர்ந்து ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும் அந்த வீட்டுத் திட்டப் பயனாளிகளில் எதிர்பார்ப்பேர் பட்டியலிலேயே அவனது பெயர் தொடர்ந்தும் இடம்பிடித்து வருகிறது.

"இந்தாங்க" என மனைவி நீட்டிய தேனீரைப் கதிரேசன் பெற்று அருந்திக் கொண்டிருக்க "விதானையாரிட்ட எங்கட கஸ்டத்தைச் சொல்லி இம்முறையாவது வீட்டுத்திட் டத்தை தரச்சொல்லி கேளுங்க" என்றவள். "அப்பனே இம்முறையாவது கண்திறவப்பா" என குல தெய்வமான விநாயகரை மனதில் நினைத்துக்கொண்டாள். அருந்திய தேனீர்க் கோப்பையை திண்ணையில் வைத்து விட்டு சைக்கிளில் கிராம சேவை உத்தியோகத்தரின் அலுவலகம் நோக்கி விரைந்தான்.

தான் வழமையாக வேலை செய்யும் முதலாளியிடம் நேற்றைய தினமே அனுமதி பெற்று இன்றைய தினம் சிறிது தாமதமாக வேலைக்கு வருவதாகக் கூறியிருந்தான். தொழிலில் அவன் ஒரு நியாயஸ்தன். தாமதமாகச் செல்லும் நாட்களில் மேலதிக நேரம் வேலை செய்வான். அன்றும் அவ்வாறே சிந்தித்திருந்தான். தமக்கொரு நிரந்தர வீடின்மையாலும் தமது பகுதி தாழ்நிலப் பகுதி என்பதாலும் வருடம் தோறும் மழைகாலத்தில் இடம் பெயர்வது வழக்கமாக இருந்தது. எனினும் கடந்த வருடம் இடப்பெயர்வு துன்பம் நிறைந்ததாக அமைந்திருந்தது. இரவிரவாகப் பெய்த மழைவீட்டுக்குள் நுழைந்தபோது பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் உட்பட அனைத்துமே சேதமடைந்திருந்தது. சில பொருட்களை உயரத்தில் பக்குவப்படுத்திய போதிலும் அனேக பொருட் களை அவர்கள் இழந்திருந்தார்கள். ஒவ்வொரு முறையும் மழைவெள்ளம் பாதிக்கப்படும் போதெல்லாம் சற்றுத் தொலைவிலுள்ள பாடசாலையிலேயே அடைக்கலம் பெறுவர். நாலைந்து வருடங்களின் முன் பல குடும்பங்கள் அவ்வாறே பாடசாலையில் தஞ்சமடைந்திருந்தன. ஒவ் வொரு வருடமும் படிப்படியாக வீட்டுத் திட்டம் கிடைத்து வந்ததால் அவ்வாறு இடம் பெயர்வோர் குறைவடைந்து கடந்த இரு வருடங்கள் மழைகாலத்தில் அவனது குடும்பம் மட்டுமே அவ்வாறு இடம் பெயர்ந்து வருகிறது. ஒவ்வொரு வரும் தமது பேச்சு வல்லமையால் அத்திட்டத்தைப் பெற்றுச் செல்ல கதிரேசனுக்கு அவ்வாய்ப்பு எட்டாக் கனியாகவே இருந்தது.

அந்நிலைமைக்கு அவனது இயல்பும் பிரதான காரணமாக இருந்தது. எதையும் வற்புறுத்திக் கேட்கும் சுபாவம் அவனிடம் இல்லை. காலம் வரும் போதுதான் கிடைக்கும் என நம்பிக்கொண்டிருப்பவன். கிராம அலு வலரின் அலுவலகத்தை அடைந்த அவன் சைக்கிளை ஓரமாக நிறுத்தி உள்ளே சென்றான். அலுவலகத்தில் ஏற்கனவே நாலைந்துபேர் கதிரைகளில் அமர்ந்திருந்தனர். அலுவலகம் இன்னமும் திறக்கப்படவில்லை. அங்கிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்தவன் அருகிலிருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தான். "எத்தனை மணிக்கு ஜி.எஸ் வருவாராம்"?
"இப்ப வாற நேரம் தான் தம்பி ஆனால் அதற்குமுன் வேலை செய்யிற பிள்ளை வரவேணும் அதன் பின்தான் அவர் வரு வார்" எனக்கூறியவர் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை பார்த்து இப்பவே ஒம்பதேகால் ஆகீட்டுது எனச் சலித்துக் கொண்டார். அப்போது தான் ஒம்பதைரைக்குள்ள வேலைக்கு வந்திடுவன் ஐயா என தனது முதலாளியிடம் கூறியதை நினைத்துப் பதற்றமடைந்தவன் கதிரையின் நுனியில் பதற்றத்துடன் நகர்ந்து அமர்ந்தான். அவனது முதலாளி வேலையில் இறுக்கமானவர் கொஞ்ச சேரம் குறைவாக வேலை செய்தாலும் சம்பளத்தைக் குறைத்து விடுவார். எனினும் மேலதிகமாக வேலை செய்வோம் இன்றையதினம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என நினைத்துத் தன்னைத் தேற்றிக்கொண்டான்.

வேலை செய்யும் பெண்பிள்ளை வந்து அலுவல கத்தைத் திறந்த போது ஒவ்வொருவரும் தமது தேவையை அந்தப் பெண்ணிடம் கூற முற்பட்டனர். எனினும் "ஜி.எஸ் ஐயா இப்ப வந்திடுவார் வந்த ஒழுங்கிலதான் ஐயாவைச் சந்திக்கலாம் ஐயாவிட்ட உங்கட பிரச்சியையனயைச் சொல் லுங்கோ" எனக்கட்டுப்பாடு போட்டாள். நேரம் போய் கொண்டிருந்தது கதிரேசனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தனது முதலாளி கண்டிப்பானவர். எனது பிரசசினையை புரிந்து கொள்ளமாட்டார். இன்று நல்லாப் பிந்தப் போகுது என பதற்றமடைந்தவன் இவ்வேலை முடிந்ததும் காலைச் சாப்பாடு எடுக்காமலே வேலைக்குச் செல்வோம் என நினைத்துக்கொண்டான்.

ஜி.எஸ் வந்து ஒவ்வொருவராக சந்தித்துக் கொண்டிருந்தார். அவனது நேரம் வந்தது எழுந்து உள்ளே சென்றவன், "ஐயா மழைக்காலம் வருகுது இம்முறையும் இடம்பெயரவேண்டி வரும் போல கிடக்கு வீடும் மேய்ச்சல் போகம் ஆனால் காசுப்பிரச்சினையாலை பழைய தறப்பாள் ஒண்டால தான் ஐயா கூரைக்கு மூடியிருக்கிறன். பிள்ளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் வேல்

வயதுக்கு வந்திட்டுது. நெடுக இடம் பெயர்வது கஸ்டம் ஐயா இந்த உதவியைச் செய்து தந்தா நான் உயிருள்ளவரை மறக்கமாட்டன்" என தனது இயல்புக்கு அப்பால் தனது பிரச்சினையைக் கொட்டினான். கிராம அலுவலர் கதிரேசனை நிமிர்ந்து பார்த்து விட்டு தனது வீட்டுத்திட்டப் பெயர்கள் அடங்கிய கோவையைப் புரட்டினார். "நான் என்ன செய்ய இம்முறையும் பட்டியலுக்குள்ளை உமது பெயர் வரேல்ல".

"ஐயா உங்களைத்தான் மலைபோல நம்பியிருக்கிறன். கைவிட்டுடாதேங்கோ ஐயா" எனக் கையெடுத்துக்துகும்பிட்டான். அவனது நிலை கண்டு மனம் இளகிய கிராம அலுவலர் கைத்தொலைபேசியை இயக்கி மேலதிகாரி ஒருவருடன் உரையாடினார். கதிரேசனின் நிலையைத் தெளிவுபடுத்தியவர் முகத்தில் பிரகாசத்துடன் கதிரேசனை நிமிர்ந்து பார்த்தார். "எமது பிரிவுக்கு பத்துப் பேருக்குத்தான் வீடு ஒதுக்கினவை இப்ப மேலதிகமாக ஒன்று தர முயற்சி செய்கிறார்களாம் அப்ப உமது பெயர் பதினோராவதாக வரும். இம்முறை வீடு கட்டலாம் அதற்குரிய ஒழுங்குகளை செய்யுங்கோ" எனக் கூறியவர் "சரி அடுத்தாளை உள்ளே அனுப்பும்" என உதவியாளரைப் பணித்தார்.

திருப்தியுடன் வெளியே வந்த கதிரேசன் வேலைக்கு நேரம் போனாலும் காரியம் வெற்றியளித்த திருப்தியில் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு செல்லாமலே வேலைக்கு சென்றான். வழியில் அவனது முதலாளி மோட்டார் சைக்கிளில் எதிர்ப்பட்டவர், "அரை மணித்தியாலத்தில வருவதாகக் கூறிவிட்டு இப்ப ஒன்பதரை மணியாகீட்டுது" என எரிந்து விழுந்தார். "மன்னியுங்கோ முதலாளி அதுக்கேற்ப பின்னேரம் நிண்டு வேலை செய்யிறன்" என்றவனிடம் "இண்டைக்கு ஆறு மணிவரை வேலை செய்" எனப் பணித்து விட்டுச் சென்றவர் நேராக கிராம அலுவலரிடம் சென்றார். வந்தவர் தனவந்தர் என்பதால் பேசிக் கொண்டிருப்பவரை வெளியே தாமதிக்குமாறு கூறிவிட்டு அவரை எழுந்து வரவேற்று அவர் அமர்ந்ததுமே தான் அமர்ந்து கொண்டார். வந்தவர் தான் கொண்டு வந்த நீள என்வலப்பை நீட்டினார் அதை வாங்கிப் படித்த கிராம அலுவலர் கதிரேசனின் முதலாளியை ஏறிட்டார். அது ஓர் எம்பியின் கடிதம். "ஐயா இந்தமுறை பத்துப் பேருக்கத் தான் வீட்டுத் திட்டம் வந்தது. இப்ப கதிரேசன் என்ற மிகவும் கஸ்டப்பட்டவர் வந்தவர் நீண்டகாலமாக வீட்டுத் திட்டப் பட்டியலில வெயிட்டிங்கில இருக்கிறார். பாவம் நெடுக வெள்ள இடப்பெயர்வில் பாதிக்கப்படுகிறார். அதால டி எஸ்சோட கதைத்து மேலதிகமாக ஒண்டு கேட்டிருக்கிறன். அவையளும், எல்லா ஜி. எஸ் பிரிவுக்கும் கொடுக்க வேணும் என்கினம் இப்ப என்ன செய்ய" என யோசித்து விட்டு "நீங்கள் எம்பின்ரை கடிதம் வைச்சிருக்கிறியள் டி எஸ் ஓடை ஒருக்கால் கதையுங்கோவன்" எனக் கூற. "இல்லை இல்லை நான் ஏற்கனவே அவரோட கதைச்சிட்டன் அவர்தான் இங்கை கடிதத்தைக் குடுக்கச் சொன்னவர். அதோட அந்தக் கதிரேசன் என்ர தோட்டத்திலதான் வேலை செய்யிறான். அவனிட்டை அரசாங்கம் தாறதைவிட மீதிக்காசைப் போட்டு வீடுகட்டி முடிக்க வசதி இருக்காது. திட்டம் கொடுத்தால் வீடும் பெண்டிங்கிலதான் இருக்கும். எம்பியும் கடிதம் தந்தவர் அவருக்கு எலக்சனிலை எங்கட பகுதில முழுவேலையும் நான்தான் செய்தனான் பாத்து செய்யுங்கோ ஜி எஸ்" எனக் கூறி நிறுத்தினார். "அப்ப அடுத்த கோட்டாவில சேர்ப்பம்" எனக்கூற இடை மறித்த தனவந்தர் "இல்லை இல்லை அரசியல் போற போக்கில அடுத்த கோட்டா வாறதுக்கான வாய்ப்பு குறைவு எண்டு எம்பியும் சொன்னவர் அதால இந்தமுறையே பட்டியலில சேருங்கோ" எனக் கூறியவர் "என்ரை வீட்டை மகளுக்கு எழுதிப்போட்டன். என்ரை பேரிலை இன்னொரு காணி இருக்கு அதிலதான் வீடுகட்ட வேணும்" எனக்கூறியவரிடம் எதையும் மறுத்துப் பேச முடியாதென உணர்ந்த கிராம அலுவலர் கடிதத்தைப் பெற்ற பின் தான் டி எஸ் ஓவ்விசிலை கதைத்து ஆவன செய்வதாகக் கூறி அவரை அனுப்பினார். விடை பெற்ற தனவந்தர் வெளியேறும் போது தனது தொலைபேசியில் யாருடனோ உரையாடியவாறு சென்றார்.

சிறிது நேரத்தில் கிராம அலுவலரின் தொலைபேசிக்கு வந்த உயர் அதிகாரியின் அழைப்பில் குறித்த தனவந்தரை வீட்டுத் திட்டப் பயனாளிகளில் ஒருவராக இணைத்தல் உறுதிசெய்யப்பட்டது. பட்டியலில் செய்யப்படும் திருத்தம் கதிரேசனைப் பட்டியலிலிருந்து நீக்கும் என்பதை அறிந்த கிராம அலுவலர் தனது தொழிலில் தனது இயலாமையை நினைத்து தன்னைத் தானே நொந்து கொண்டார். கதிரேசனுக்கு தான் அளித்த உறுதி மொழியை நினைத்து வேதனையடைந்தார்.


அன்று மாலையில் வேலை முடிந்து வேலைக்கான சம்பளத்தைப் பெற்று, வீட்டுத் திட்டம் கிடைத்து வீட்டுப் பிரச்சினை தீரப் போகும் மகிழ்ச்சியுடன் மனைவி, பிள்ளைகளுக்கு தின்பண்டங்களையும் வாங்கிக்கொண்டு வீடு சென்ற கதிரேசன், மனைவி பிள்ளைகளுடன் புதிய வீடு கட்டுவதற்கான ஏற்பாடுகளைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தான்.

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசை எட்வேட்

# வயோதிபர் சங்கம்



அதுவொரு மாதா கோவில். அன்று முதியோர்க ளுக்காக 'வயோதிபர் சங்கம்' ஸ்தாபிக்கப்பட இருக்கிறது! குருவானவர் அன்றைய ஞாயிறு பூசை முடிய அறிவித்தலின் போது தெரியப்படுத்தினார். ஏற்கனவே கோயில் பங்கைச் சேர்ந்த வயதானோர்க்கெல்லாம் அழைப்பு விடுக்கப்பட்டி ருந்தது.

கோயில் வளாகப்பகுதியொன்றில் வட்டமாக கதிரைகள் போடப்பட்டிருந்தன. வயது சென்றோர் தள்ளாடித் தள்ளாடி அவ்வாசனங்களில் அமர்ந்து கொண்டனர். சில ரைப் பிடித்துக் கொண்டும் வந்து இருத்தியதை காணக்கூடி யதாக இருந்தது. வேறு சிலர் மெத்த உசார் நடை போட்டு வந்தார்கள். ஆனால், எல்லார் முகத்திலும் 'நமக்கென்ன நாம வாழ்ந்து கெட்டவர்கள் எக்கேடாவது கெட்டுப் போவம்! என்ற பாவனையே இருந்தது.

சுவாமியார் ஆசியுரை கூறி ஆரம்பித்து வைத்தார். "நீங்கள் வயதால் மட்டுமல்ல, அனுபவத்தால் பெற்ற அறிவாலும் முதிர்ந்தவர்கள். அனுபவ அறிவுக்கு மேலான அறிவு எங்கும் எதிலும் இல்லை. கடவுள் காட்டிய வழியில் சிந்தனையைச் செலுத்தி வாழ்ந்து வந்தால் நல்ல பேறு கிடைக்கும். உங்கள் அனுபவத்தை ஆண்டவர் காட்டிய பாதையை இளைய சமுதாயத்திற்கும் கூறி வழிப்படுத் துவீர்களாக. இந்தச் சங்கத்தால் எல்லோருக்கும் நல்லருள் கிட்டுவதாக' அதன் பின்பு சிற்றுண்டி குளிர்பானம் வழங்கப்பட்டது. இளைஞர்யுவதிகளே இந்தப் பரிமாறலை மேற்கொண்டார்கள். உங்கள் அனுபவங்களை சொல்லுங்கள் என்று கை ஒலி வாங்கியை கையில் கொடுத்தார்கள். சிலர் தங்கள் அனுபவக் கதைகளைச் சொன்னார்கள். சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. பலர் மறுத்து விட்டார்கள். அடுத்ததாக பாடச் சொன்னார்கள். அதிலும் சிலர் தான் பாடினார்கள். அர்த்தமுள்ள பழைய சினிமாப் பாடல்களை கேட்கக் கூடியதாக இருந்தது. சபையோர் சிரித்து கை கொட்டி தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இந்த இடத்தில் மகிழ்ச்சி பிரவாகித் துக் கொண்டிருந்தது. கசங்கிச் சுருங்கிய மேனியெங்கும் பரவசம் ஊர்வது போலிருந்தது. சற்று நேரத்தில் இன்னிசை பாடல் பிரவாகித்தது. அதுவும் குத்துப்பாட்டாய் பேரொலி செய்தது. எல்லோரையும் ஆடச் சொன்னார்கள். எல்லோரும் ஆடினார்கள். இயலாத வெகு சிலர் மட்டும் கைத்தாளம் போட்டுக் கொண்டிருந்து விட்டு சுருதியேறி ஆடினார்கள். ஆட்டத்தைப் பார்த்தால் இவர்களெல்லாம் கிழடுகள் தானா? அந்தக் காலத்தில் என்ன ஆட்டம் போட்டிருப்பார்கள் என்றே தோன்றியது! கை கோர்த்தும் ஆடி அன்புறவை கூட்டுறவை காட்டி நின்றார்கள். சற்று நேரத்தில் வயோ திபர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் எல்லாம் மகிழ்ச்சி புத்துணர்ச்சியோடு காணப்பட்டார்கள். சீவியத்தில் கதைக்கா தவர்கள் எல்லாம் கதை பேசிக் கலந்துரையாடினார்கள். பார்த்துக் கொண்டிருந்த குருவானவரும் அமைதியாக புன்னகை பூத்துக் கொண்டிருந்தார். தான் எண்ணியபடி நடந்தேறுகிறது என்ற பூரிப்பு. வந்தோரெல்லாம் கன காலமாக தம் கையை விட்டுப் போன மகிழ்ச்சியை புத்துணர்ச்சியை இன்னும் நல்ல படியாக வாழ வேண்டும் என்ற எழுச்சியை கைப்பிடித்ததாகவே தோன்றியது.

அடுத்த நிகழ்வாக சங்கத்துக்கான தலைவர், செய லாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்தெரிவு இடம்பெற்றது. எல்லாப் பதவி நிலையினரையும் ஏகமன தாகவே தெரிவு செய்தார்கள். ஏற்கனவே தகுதியானவர் யாரென்று தீர்மானித்திருந்தார்கள் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசை எட்வேட்

தலைவர் முன்னே தோன்றி உரையாற்றினார். அவர் முன்னே வரும் போதே பலத்த கரகோசம் எழுந்தது. பிரபல மானவர் போலும். "நான் இதை எதிர்பார்க்கவில்லை, நான் கதைகள் கட்டுரைகள் எழுதி நாட்டு மக்களுக்கு நல்லறிவு ஊட்டுவதோடு என் பணி முடிந்ததென்று அமைதியாகக் கிடந்தேன். இப்போது எழுதியவற்றில் சிறிதளவாவது நடைமுறைப்படுத்த வாய்ப்பை நல்கியுள்ளார்கள். நன்றி"

அடுத்து செயலாளர்பொருளாளரும் நன்றி தெரிவித்தார்கள். "நமது சங்கத்தில் இன்னும் இணையாமல், வராதவர்களாக, வரமுடியாதவர்களாக இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்களைத் தேடிப் போய் நம் சங்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி தீர்மானிக்கப்பட்டது. சந்தாப் பணம் எவ்வளவு என்றும் மிகக் குறைந்த தொகையாக தீர்மானிக்கப்பட்டது. அதையும் கட்டாயப்படுத்தி வாங்கக்கூடாது. விரும்பித் தந்தால் மாத்திரமே ஏற்க வேண்டும், கடும் பாதிப்புற்றோர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

கூட்டம் முடிந்ததும் சீவியத்திலேயே நிமிர்ந்தும் பார்க்காது, பேசிப்பழகி அறியாதவரெல்லாம் கலந்துற வாடினர். செபிப்பார்கள், பாடுவார்கள், எல்லா சடங்குகள் ஆராதனைகளிலும் பங்கேற்பார்கள். அவரவர்பாட்டில் போய்க்கொண்டே இருப்பார்கள். இன்று தான் அயலானையும் நேசிப்பது போல் கலந்துறவாடினார்கள். அடுத்த வாரத்திலிருந்து அங்கத்தவர்களை மேலும் சேர்க்கும் பணி ஆரம்பமாயிற்று. தலைவர் மட்டும்தான் (வயதான) ஆண்மகன். செயலாளர், பொருளாளர் இருவரும் அம்மையார்களே. தலைவர் இல்ல ஒழுங்கையில் இருந்துதான் இவர்கள் தம் பணியை ஆரம்பித்தார்கள்.

முதல் படலையைத் திறந்து போன போதே, ஆர் எவர் என்று வியப்போடு பார்த்தார்கள். ஏன் வந்த நீங்கள் என்றும் கேட்டார்கள். "அட என்னக்கா ஒண்டும் தெரியாம கதைக்கிறாய். நீ ஒழுங்காக் கோவிலுக்கு போனாலெல்லோ இதெல்லாம் தெரியும்"

"வாங்கோ இருங்கோ என்ன விசேசம்"

"அது புள்ள, நாங்க எங்கட கோயிலால இப்ப துவங்கின வயோதிபர் சங்கத்தில வயதாகி கெட்டு நொந்தவங்களை சேர்த்துக் கொண்டு வாறம். உங்கட வீட்டிலயும் வயதானவர் இருக்கிறார் என்று அறிந்து தான் வந்திருக்கிறம்."

"அது சரி எங்கட அம்மம்மா தான் இப்ப கிடந்து கொண்டு எங்களுக்கு உபத்திரவமா இருக்கிறா. இப்ப அவவ உங்களோட சேர்க்கிறதால எங்களுக்கென்ன நன்மை கிடைக்கப் போகுது சொல்லுங்கோ பார்ப்பம்"

தலைவர் தான் இதற்கு பதிலிறுத்தார். "நாங்கள் இப்ப தான் இந்த வயோதிபர் சங்கத்த ஆரம்பித்திருக்கிறம். இப்பவே என்ன கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் நாம் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் பொறுங்கள் கால அவகாசம் தாருங்கள். இயலாதவர்க்கு இயன்ற வரை அனுகூலமாயிருக்கப் பார்ப்போம்"

அப்போது உள்ளறையில் இருந்து பொல்லூன்றிக் கொண்டு பாட்டியானவள் வெளிப்பட்டாள். பார்வை மங்கிப் போனாலும், வந்திருப்போரை இனங்கண்டாள். கோயிலும் கையுமாகத் திரிந்த அவளுக்கு, இவர்களை தெரியாமல்இருக்குமா என்ன? பாட்டி அமர்ந்து கொண்டாள். சுருங்கிய முகம் பிரகாசத்துக்கொண்டிருந்தது. "உங்களுக்கு எங்கட சங்கத்திலே சேர விருப்பந்தானே?"

"இதென்ன உங்கட கதை, நாங்களெல்லாம் ஒன்று சேர்ந்து கோவில்ல பிரார்த்தனை செய்யுறவங்கள் தானே, உங்களைத் தெரியாதா எனக்கு? உங்களோட சேர பிரியப்படாமலா இருப்பன். எனக்கு ஏலாம போனதால எல்லே இப்ப அவ்வளவா கோவிலுக்கு வாற இல்லை." மூன்று அம்மையார்களும் பழையதுகளை ஞாபகப்படுத்தி பேசிக் கொண்டார்கள். அக்கறையோடு உடல் நலன் குடும்ப நலன்களை விசாரித்தார்கள். சில ஆலோசனைகளையும் சொன்னார்கள். தலைவரும் இடைக்கிடை குரல் கொடுத்தார். ஆனால் எல்லோரும் சிரித்து சிரித்தே பேசி மகிழ்ந்தார்கள். இவற்றை அவதானித்துக் கொண்டிருந்த பேத்தி "அம்மம்மா இண்டைக்கு சிரிச்சு குதூகலமாயிருந்ததை நான் எண்டைக்குமே பார்த்ததில்லை. இனி அவவுக்கு மன வருத்தமோ, உடல் வருத்தமோ இருக்காது" என்றாள்.

நாலு வளவு தள்ளி ஒரு வீட்டுள் உள்நுழைந்தார்கள். அங்கே வயதான தம்பதியர்மட்டுமே இருந்தார்கள். அவர் உத்தியோகம் பார்த்து இப்போது உபகாரச்சம்பளம் பெற்று வருகின்றார். பிள்ளைகள் குடும்பமாகி தூரப் பிரதேசங்களில் இருக்கின்றனர். எப்போதாவது தொலைபேசியில் தொடர்பு கொள்வார். அவ்வளவு தான். மற்றப்படி யாரும் இவர்களைத் தேடி வருவதும் இல்லை. உறவாடுவதும் இல்லை. 'அவர்களுக் கென்ன நல்ல வருமானம் இருக்கு. நல்ல வசதியா இருக்கிறாங்க' என்ற எரிச்சல் பொறாமையோ என்னவோ, ஒருவரும் எட்டியும் பார்ப்பதில்லை. ஆகையால் போலும் இவர்கள் தேடி வந்து கலந்துறவாடியது பேருவகையாக இருந்ததைக் காணக்கூடியதாகவே இருந்தது. அவரோடு தலைவரும் மூன்று அம்மையார்களும் பழைய ஞாபகங்களை மீட்டி குதூகலமாக பேசி புத்துணர்ச்சி பெற்றார்கள். அவர் சந்தாப்பணமும் செலுத்தி, மேலதிக நிதியுதவியும் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசை எட்வேட்

தம்பதிகள் இருவரும் வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தனர். விழிகள் ஆனந்தத்தால் பிரகாசமாகி ஒளி வீசியது. எங்களைத் தேடி சொந்தமே பந்தமே என்று யாரும் வருவதில்லை. நீங்கள் தான் எந்த எதிர்பார்ப்புமில்லாமல் தேடி வந்து புதுத்தென்பை ஊட்டியிருக்கிறீர்கள். நன்றி! மீண்டும் வருக என்றார்.

இன்னும் சில வீடுகளுக்குப் போய் வந்தனர். அங்கெல்லாம் ஆரம்பத்தில் அலட்சிய மனோபாவம் இருந்தாலும், போகப் போக நல்ல குதூகலமான வரவேற்பும் உபசரிப்பும் பெருகியதைக் காணக்கூடியதாக இருந்தது. பொழுது சாய்ந்து இருள் கோலமிடலாயிற்று. "இண்டைக்கு இவ்வளவும் போதும், அடுத்து வசதியான நேரம் அடுத்த தெருவை கவனிப்போம். நீங்கள் கவனமாக வீடு போய்ச் சேருங்கள்."

அவர்கள் பிரிந்து போயினர். தலைவர் மாலை மயங்கும் நேரம் தளர் நடை போட்டார். அவர் தலையில் சிந்தனை விரிந்து கொண்டே இருந்தது. 'அட இதே தெருவில் எவ்வளவு காலமாக போய் வருகிறேன், அனேகமா னோர் உறவினர் தெரிந்தவர் தாம் வருத்தம் வாதையோடு கஸ்ட துன்பங்களோடு வாடிச் சோர்ந்திருப்பர். தேடுவாரற்று விரக்தியோடு கிடப்பர். நான் ஒருதரமாவது அவர்களைக் கண்டு ஆறுதலளித்தேனா? பத்திரிகைகளுக்கு எழுதி பேரும் புகழும் கிடைத்தால் போதும் என்று மனித நேயம் இல்லாமல் வாழ்ந்து விட்டேனே! என்னே குணக்கேடு! 'நீங்கள் எங்க ளுக்கு ஒரு உதவியும் செய்யா விட்டாலும் பரவாயில்லை. இப்பிடி அடிக்கடி வந்து கதைத்துப் பேசினாலே எவ்வளவு ஆறுதலாக இருக்குமே' என்றார்கள் எத்தனையோ பேர்!

அடுத்த மாதக் கூட்டம் ஆரம்பமாகியது. ஐம்பது பேர் வரையில் வந்திருந்தார்கள். குரவரின் ஆசியுரையோடு கூட்டம் ஆரம்பமாகியது. தலைவர் எழுந்து வந்தோர் அனைவருக்கும் வரவேற்று நன்றி கூறினார். செயலாளர் அறிக்கையும், பொருளாளர்அறிக்கையும் வாசிக்கப்படும் என்று அறிவித்தார். செயலாளர் அங்குரார்ப்பண கூட்டத்தில் நிகழ்ந்தவற்றையும் பேசியோரின் முக்கிய கருத்துக்களையும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் வாசித்தார். அடுத்து பொருளாளர் அறிக்கை. அவர் இதுவரையில் எத்தனை அங்கத்தவர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதையும், சந்தாப் பணம் மூலம் கிடைத்த தொகையையும் கூறினார். இன்னும் செலவீனங்கள் ஏற்படாததால் செலவை சொல்லவில்லை. இரு அறிக்கைகளையும் சபையினர் ஏற்றனர்.

அதன் பின்னர் தலைவர் உரையாற்றினார். "பெரியோர் அனைவருக்கும் வணக்கம். வயதான பின்னர் தான் மகான்கள் தோன்றினார்கள். தத்துவ ஞானிகள் கவிஞர்கள் அற்புதமான காவியம் படைத்தோர், ஏன் கண்டுபிடிப்புக்களை கண்ட விஞ்ஞானிகள் எல்லாம் தோன்றி சாதனை படைத்தார்கள். ஆகையால் ஒன்றுக்கும் உதவாதவர்கள் நாம் என்ற தாழ்வுமனம் வேண்டாம். என்றாலும் இந்தப் பேச்செல்லாம் மேடைக்கு அலங்காரமாயிருக்கும். நிய வாழ்க்கையில் வயதானோர் வேண்டப்படாத பிறவிகளாகவே ஒதுக்கப்பட்டு மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர்.

நாம் மூவரும் அத்தகையோரையெல்லாம் தரிசித்தோம். தம்மைத் தேடி அன்பாக ஆதரவாக கதை பேசி கஷ்ட துன்பங்களை கேட்டறிந்து, ஆறுதலளித்ததே அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை புதுத்தென்பைத் தந்தது. 'நீங்கள் எங்களுக்கு உதவியேதும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, இப்படி வந்து ஆறுதலாக கதை பேசினாலே காணும்'. என்றார்கள். எங்கள் செயலாளர் பொருளாளரைப் பாராட்டவே வேண்டும். இரத்த உறவினர்போல் கதைபேசி ஆறுதலையும் தேறுதலையும் அளித்தார்கள்.

நம் இயேசுவானவர் மக்கள் குடியிருப்புக்கள் தோறும் சென்று போதித்தார், சாதித்தார். நோயாளிகளை குணப்படுத்தினார். இன்னும் எத்தனையோ அருள்பாலித்தார். நமக்கு அந்த வல்லமை இல்லை. அன்பான இனிய மொழி பேசி தென்பூட்டவாவது எம்மால் முடியும். ஆதை நாம் மூவரும் மட்டுமே செய்து கொண்டிருத்தல் கூடாது. அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்". என்று கூறியவர் அடுத்த மாதத்துக்கான தரிசிப்புக்காக முன்வந்தோரை தெரிவு செய்தார்.

"அடுத்து நாம் வார்த்தையாலத்தாலேயே துன்பப் பட்டோருக்கு ஆறுதலளிக்க இயலாது. கடும் பாதிப்புற்றோருக்காக ஏதும் உதவி செய்யத்தான் வேண்டும்" ஒருவர் எழுந்து சொன்னார்,

"செத்ததுக்குப் பிறகு சவப்பெட்டி எடுத்துக் குடுப்பம்"

"இதனால் அவருக்கு என்ன பலன் கிட்டும்? உயிரோடு இருக்கும் போது தான் உதவி செய்ய வேண்டும். இவர் கருத்தை எல்லோரும் ஏற்றனர். எவ்வளவு தொகை கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் இனிதே நிறைவே றியது.

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

# கரும்பலகை

## அத்தியாயம் 11




காலையில் எழும்பி அவசரஅவசரமாக வெளிக்கிட்டு பாடசாலைக்கு வெள்ளெனவே சென்றுவிட்டாள் வசந்தி. அந்த வதந்தி பரப்பும் ஆசிரியையைச் சந்தித்து வாயை அடக்கவேண்டுமென நினைத்துக் கொண்டாள்.

வசந்திபோய் பத்து நிமிடத்தில் அந்த ஆசிரியையும் வந்துவிட்டாள்.

வசந்தி அவளின் அருகில் சென்று “ உங்களோடை கொஞ்சம் கதைக்கலாமோ?” என்று கேட்டாள். அவளும் புன்னகைத்தபடி “சொல்லுங்கோ..” என்றாள்.

“ நீங்கள் நேற்று புது மாஸ்டரோடை என்னைக் கண்டதை பிழையாய் நினைச்சுப் போடாதையுங்கோ. அவர் என்னோடை யூனியிலை படிச்சவர். தனக்கு இஞ்சை வேலை கிடைச்சுதெண்டதாலை எனக்கும் இன்னொரு நண்பருக்கும் சாப்பாடு வாங்கித் தந்தவர். அவ்வளவு தான்” என்றாள் வசந்தி.

“ ஓ... அப்பிடியே. கவலைப்படாதையும் நான் ஒருவருக்கும் பிழையாய்ச் சொல்ல மாட்டன்.” என்று அவர் கூறியதும் வசந்தி அமைதியாகப்போய் ஆசிரியர் அறையுள் இருந்து கொண்டாள். மனதிற்குள் இன்று கபிலனோடை கதைக்காமல் இருக்கவேணும் என்று நினைத்துக் கொண்டாள்.

நேரம் சரியாக எட்டு நாற்பதிற்கு வெள்ளைக் கீழங்கியும் வெள்ளைச் மேலங்கியும் அணிந்தபடி கபிலன் பாடசாலையினுள் நுழைந்து கொண்டிருந்தான்.

பார்ப்பதற்குக் கம்பீரமாகவும் அழகனாகவும் வந்து கொண்டிருந்த அவனை வசந்தி மட்டுமல்ல உயர் வகுப்புப் பெண் பிள்ளைகளும் ரசித்தார்கள்.

பாடசாலைக்குள் வந்த கபிலன் முதலில் அதிபரின் அறைக்குள் சென்று அவரோடு கதைத்துவிட்டு ஆசிரியர் தங்குமறைக்கு வந்தான். வசந்தி அவன் வருவதற்கு முன் அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

அறைக்குள் வந்த கபிலனின் கண்கள் வசந்தியைத்தான் தேடின. அங்கிருந்த ஆசிரியைகள் அவனுக்குக் காலை வணக்கம் கூறினார்கள். அவன் யாரையோ தேடுவதுபோல்பட “ மாஸ்டர் ஆரைத் தேடிறியள்?” என்று ஒரு ஆசிரியை கேட்க கபிலனும் “ வசந்தி ரீச்சரைத்தான் தேடிறன்” என்று வஞ்சகமில்லாமல் கூறினான். ரீச்சர்மார் கொடுப்புக்குள் சிரித்தபடி “ இப்ப இஞ்சைதான் நிண்டவ. வகுப்பறைக்குப் போட்டா போலை” என்று அந்த ஆசிரியை கூறினார்.

“ அப்ப சரி” என்று கூறிவிட்டு கபிலன் அங்கிருந்த கதிரையில் அமர்ந்தான்.

அந்த ஆசிரிய அறையில் கபிலன் மட்டுமே ஆண். அவனுக்கு என்னவோ போலிருந்தது. சிறிது நேரத்தில் உதவித் தலைமை ஆசிரியை கமலனுக்கான நேர சூசியைக் கொண்டு வந்து கொடுத்தார். அதில் இன்று பத்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு, உயர்தர வகுப்பு ஆகியவற்றுக்கு இன்று படிப்பிக்க வேண்டும் என இருந்தது. எல்லாம் கணித பாடங்களாகவே இருந்தன.

மணி அடித்தது.

முதல் வகுப்பு எட்டாம் வகுப்பு. கணித பாடம். கபிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

எழுந்து வகுப்பறையை நோக்கிச் சென்றான்.
வகுப்பறைக்குள் நுழைந்ததும் பிள்ளைகள் எழுந்து நின்று "காலை வணக்கம் சேர்" என்று கூறினார்கள். கபிலனும் வணக்கம் கூறிவிட்டு பதிவுப் புத்தகத்தை எடுத்து ஒவ்வொரு பிள்ளைகளின் பெயர்களையும் அழைத்தான். ஒவ்வொருவரும் " உள்ளேன் சேர்" என்று கூறினார்கள்.
அதனை வைத்துவிட்டு அவர்களோடு உரையாட ஆரம்பித்தான் கபிலன். அவனுடைய உரையாடல் அவர்களுக்குப் பிடித்து அவர்களும் அவனோடு சந்தோசமாக உரையாட ஆரம்பித்தார்கள்.
ஆசிரியத் தொழிலில் ஆசிரியருக்கும் மாணவனுக்குமான உறவு என்பது ஒரு தகப்பனுக்கும் பிள்ளைக்குமான உறவாக இருக்கவேண்டுமென்று எப்பொழுதும் நினைப்பவன் கமலன்.
கதைத்து முடிந்ததும் கணிதபாடத்தை அவர்களுக்குப் படிப்பித்தான். படிப்பிக்கும்போதுதான் இந்தப் பாடசாலையில் கற்பித்தல் முறையில் ஏதோ தேக்கம் இருப்பதாக அவன் உள்மனம் உணர்த்தியது.
பாடத்தை முடித்துவிட்டுப் பிள்ளைகளிடம் இதுவரை காலமும் அவர்களுக்குக் கணிதம் கற்பித்தது யார் என்பதை அறிந்து கொண்டு வகுப்பறையைவிட்டு வெளியே வந்தான். அவர்களுக்குக் கணிதம் படிப்பித்தது சந்திரகாந்தா மிஸ் என்று கூறியிருந்தார்கள். சந்திரகாந்தா யார் என்பதை அறிய ஆசிரியர் ஓய்வெடுக்கும் அறையை நோக்கிச் சென்றான்.
போகும் வழியில் வசந்தி வருவதைக்கண்டு சந்திரகாந்தாபற்றி விசாரித்தான். அவளும் சந்திரகாந்தா மிஸ் ஓய்வெடுக்கும் அறையில் இருப்பதாகக் கூறி " அவ கொஞ்சம் கரார். கவனம்" என்று கூறிவிட்டு வசந்தி தன் வகுப்பு அறையை நோக்கிச் சென்றுவிட்டாள்.
சந்திரகாந்தாவைத் தேடி ஓய்வெடுக்கும் அறைக்குச் சென்ற கபிலன் அங்கு வேறு ஆசிரியைகளும் இருப்பதால் குழப்பமடைந்து "இங்கை ஆர் சந்திரகாந்தா மிஸ்" என்று கேட்டான்.
" ஏன் நான்தான்" என்று கூறிக்கொண்டு ஒரு ஆசிரியை முன்வந்தார். அழகாக இருந்தாலும் முகத்திலை திமிர் தெரிந்தது.
"நான் தான் உங்கடை எட்டாம் வகுப்புக் கணிதம் இண்டையிலிருந்து எடுக்கிறன். எனக்கு உங்கடை பாடவழிமுறை தருவீர்களா?" என்று கேட்டான்.
சந்திரகாந்தா மட்டுமல்ல மற்றைய ஆசிரியைகளும் ஒண்டும் புரியாமல் விழித்தார்கள்.
"அதென்ன பாடவழிமுறை" என்று சந்திரகாந்தா கேட்டார். உடனே கபிலன் தான் இன்று படிப்பிப்பதற்குத் தயாரித்த வழிமுறைகளைக் காட்டினான்.
அதைப்பார்த்துவிட்டுச் சந்திரகாந்தா சிரித்தார்.
" நீங்கள் புதிசா வந்தபடியால் இப்படியெல்லாம் எழுதிறியள். நான் இந்தப் பள்ளிக்கூடத்திலை பத்து வருசமாய் வேலை செய்யிறன்." என்று சந்திரகாந்தா கூற " நீங்கள் எத்தினை வருசம் படிப்பிச்சாலும் வகுப்பறைக்குள்ளை போக முதல் பாடத்திற்கான தயாரிப்பு மிக அவசியம். மேற்கு நாடுகளிலை இப்பிடிச் செய்யிறதாலைதான் கல்வி ஒழுங்கா நடக்குது" என்று கபிலன் சொன்னான்.
கபிலன் சொன்ன தோரணை சந்திரகாந்தாவுக்குப் பிடிக்கவேயில்லை. ஒன்றும் சொல்லாமல் வெளியில் போய்விட்டாள். வெளியில்போன சந்திரகாந்தா நேரே அதிபரின் அறைக்குச் சென்று நடந்தவற்றை மறைத்து " மிஸ் புதிசாய் வந்த ஆசிரியர் நடக்கும் முறை சரியில்லை" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள். சந்திரகாந்தா பல வருடங்கள் படிப்பிப்பதால் அதிபரும் எதுவும் கூறாமல் " நான் விசாரிக்கிறன்" என்பதோடு நிறுத்திக்கொண்டார்.
மூன்றாவது பாடம் முடிய மணியடித்தது. வகுப்பறையை விட்டு வெளியே வந்த கபிலனை அதிபர் வரச் சொன்னதாக பீயோன் வந்து சொல்லிவிட்டுச் சென்றார்.
கபிலனும் அதிபரின் அறைக்குச் சென்றான்.
" வாரும் கபிலன்.. வகுப்புகள் எப்படிபோய்ச்சுது?"
" ஒரு பிரச்சினையுமில்லை மிஸ்" என்றான் கபிலன்.
" சந்திரகாந்தாவோடை என்ன பிரச்சினை?" என்று நேரடியாகவே அதிபர் கேட்டார்.
கபிலன் பதில் ஏதும் கூறாமல் தான் படிப்பிப்பதற்கு தயாரித்த வழிமுறைகளை அவரிடம் கொடுத்து " இதை ஒருக்காப் பாருங்கோ மிஸ்"
அவனிடம் அதை வாங்கிக் கொண்ட அதிபர் அவதானமாக அவற்றைப் பார்த்தார். அவருக்கு வியப்பாக இருந்தது. அதிபருக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியமாக இருந்தது. கபிலன் தொடங்கினான். " சந்திரகாந்தா மிஸ் படிப்பிச்ச எட்டாம் வகுப்புக்கு இன்று நான் பாடமெடுத்தன். வகுப்பின்போது சிலவிடயங்களை ஊகிக்கக் கூடியதாக இருந்தது. அதனாலை வகுப்பு முடிஞ்சதும் அவவிட்டைப்போய் இப்படியான தயாரிப்புகளைக் கேட்டன். அவற்றைத் தந்தால் எனக்குப் படிப்பிக்கிறது சுலபமாக இருக்கும் என்று சொன்னன். அவ்வளவுதான் மிஸ் நடந்தது." என்றான் கபிலன் .
அதிபருக்கு விளங்கிவிட்டது.
" சரி கபிலன் நான் பார்த்துக் கொள்ளிறன். இண்டைக்கு பாடசாலைவிட்டதும் ஆசிரியர் கூட்டம் இருக்குது" என்று ஞாபகப்படுத்தினார்.
கபிலன் அதிபர் அறையைவிட்டு வெளியே வருவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

தூரத்தில் நின்று அவதானித்த சந்திரகாந்தா அவ்வ ழியால்போன வசந்தியைக் கூப்பிட்டு " உம்மடை நண்பர் அதிபரிட்டை வாங்கிக்கட்டிக் கொண்டு போறார். வந்த முதல் நாளிலேயே அர்ச்சனை வாங்கியிட்டார். எதுக்கும் கவனமாய் இருக்கச் சொல்லும்." என்றாள் சந்திரகாந்தா.

" ஏன் என்ன நடந்தது?" என்று வசந்தி கேட்டாள்.

" நாங்கள் படிப்பிக்கிறதுக்கு முதல் வைச்சிருக்கிற ஏதோ பாடத் தயாரிப்பாம்... என்னட்டை வந்து கேட்டார். அதை நான் அதிபரிட்டைச் சொல்லிப் பேச்சு வாங்கிக் குடுத் திட்டன்." என்று சந்திரகாந்தா சொன்னாள்.

வசந்தி ஒன்றும் சொல்லாமல் மெதுவாகத் தன் வகுப்புக்குப் போனாள்.

பாடங்கள் நடந்து கொண்டிருக்கும்போது அதிபரிடமிருந்து எல்லா ஆசிரியர்களுக்கும் இன்று பாடசாலை முடிந்ததும் ஆசிரியர்கட்கான கூட்டம் இன்று இருப்பதாகச் சுற்று நிருபம் வந்தது.

சுற்று நிருபம் வந்ததும் சந்திரகாந்தாவுக்கு நல்ல சந்தோசம். தான் படிப்பிக்கிறதை விட்டுவிட்டு வசந்தியின் அறைக்குச் சென்று " பார்த்தீரே அதிபர் கூட்டம் வைச்சிருக்கிறா. இண்டைக்கு அந்தப் புது வாத்தியாருக்கு எல்லாருக்கு முன்னாலை வைச்சு சமா நடக்கப்போகுது. மணியாயிருக்கும்" வசந்தி ஒன்றுமே சொல்லவில்லை. " பார்ப்பம் என்ன நடக்குதெண்டு " என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். சந்திரகாந்தா வசந்தியோட மட்டுமில்லாமல் எல்லா ஆசிரியர்களிடமும் சென்று சொல்லிச் சந்தோசப் பட்டுக் கொண்டிருந்தாள்.

மற்ற ஆசிரியர்களும் சந்திரகாந்தாவிற்கு எதிராகக் கதைப்பதில்லை. ஏனென்றாள் சந்திரகாந்தா பள்ளிக்கூட நிர்வாகிளிலை ஒருவரின்ரை உறவுக்காறி. கபிலனையிட் டுத்தான் கவலைப்பட்டார்கள்.


" பாவம் வந்த முதல் நாளே பொடியனுக்குப் பிரச்சினையாகப் போயிட்டுது."

பாடசாலை முடிந்து எல்லாரும் வழமையாகக் கூட்டம் நடைபெறும் அறைக்குச் சென்றார்கள். எல்லாரும் கபிலனைப் பார்ப்பதும் கதைப்பதுமாக இருந்தார்கள்.

சந்திரகாந்தா வந்து கெம்பீரமாக முதல் வரிசையில் இருந்தாள். வசந்தி மனதிற்குள் ஏதும் ஏடாகூடமாக நடந்துவிடக் கூடாது என தான் வணங்கும் எல்லாக் கடவுளிடமும் கேட்டாள்.

சிறிது நேரத்தில் அதிபரும் உப அதிபரும் உள்ளே நுழைந் தார்கள்.

அதிபர் தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்து ஆசிரியர்களைப் பார்த்து " எல்லோருக்கும் வணக்கம். உங்களுடைய கடுமையான வேலை செய்யும் திறனாலை எங்கடை பள்ளிக் கூடத்திற்கு நல்ல பெயர். இன்று உங்களுக்கு ஒருவரை அறிமுகப்படுத்தப் போகிறன். கபிலன் எழும்பி நில்லுங்கோ. இவர்தான் புதிதாகச் சேர்ந்த ஆசிரியர். பெயர் கபிலன். " என்று அதிபர் கூற எல்லாரும் கைதட்டி வரவேற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்

சந்திரகாந்தா அதனைக் கேட்டும் கேட்காமலும் இருந்தாள். எங்களுடைய பாடசாலையை மேலும் ஒருபடி உயர்த்த புதிய புதிய முறைகைளை அறிமுகப்படுத்தலாமென யோசிக்கிறன். திரு கபிலன் அவர்கள் இன்று சிலவற்றை எனக்குக் கூறினார். பல புத்தகங்களைப் படித்ததன் மூலம் மேற்கு நாடுகளில் வகுப்பறைகளில் நடைபெறும் சில உத்திகளைக் கூறினார். அது எனக்குப் பிடித்துவிட்டது. அதை நான் சொல்வதைவிட திரு கபிலன் அவர்கள் கூறுவதே சரியென நினைக்கிறேன். கபிலன் நீங்களே மற்றவர்கள் புரியும்படி கூறுங்கள்" என்று கூறி நிறுத்தினார்.

சந்திரகாந்தாவுக்கு எதுவும் புரியவில்லை. அவள் நினைத்தது என்னவோ இங்கு நடப்பது வேறென்னவோ. அவள் மெதுவாக வசந்தியைப் பார்த்தாள் வசந்தி ஒரு நமட்டுச் சிரிப்பை உதிர்த்தாள்.

கபிலன் எழும்ப முன்னம் சந்திரகாந்தா எழும்பி " மிஸ் காலைமை எனக்கும் சொன்னவர். அவர் சொல்லிறதெல்லாம் எங்கடை பள்ளிக் கூடத்திற்குச் சரிவராது. நாங்கள் ஏற்கனவே வேலை செய்ய நேரம் காணாமல் இருக்கிறம். பிறகு..." இப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போது அதிபர் கையை அசைத்து அவளை இருக்கச் சொல்லிவிட்டு கபிலனை நோக்கி " கபிலன் நீர் முன்னுக்கு வந்து சொல்லும்.." என்றார். சந்திரகாந்தாவுக்கு இது அவமானமாகப் போய்விட்டது. கபிலன் எழுந்து முன்னுக்கு வந்து எல்லாருக்கும் வணக்கம் சொல்லிவிட்டு. " உங்களுக்கு வேலையைக் கூட்டுவதல்ல இது. இன்னும் உங்களின் வேலையைச் சுலபமாக்குவதே இது. பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் முறையான கல்வியைப் பெறவேண்டும். அதற்கு ஆசிரியர்களாகிய நாங்கள் எங்கள் கடமையை தெளிவாகச் செய்ய வேண்டும். இப்போது நடைமுறையில் வகுப்பறையில் உள்ள ஆசிரியர் குறிப்புப் புத்தகத்தில் படிப்பித்து முடிந்தபின் என்ன படிப்பிக்கிறீர்கள் என்பதை எழுதும் வழக்கம் உள்ளது. ஒரு வகுப்பறையில் வெவ்வேறு தரங்களை உடைய மாணவர்கள் இருக்கிறார்கள். அது உங்கள் எல்லாருக்கும் தெரியும். அவர்கள் ஒவ்வொருவரும் உங்கள் படிப்பித்தலைப் பெறவேண்டும். அதனை நாம் செய்வதாயின் வகுப்பறைக்குச் செல்லமுன் நாங்கள் தயாராகச் செல்ல வேண்டும். அதாவது தரங்குறைந்த பிள்ளைக்குரிய வேலை எம் கையில் இருத்தல் வேண்டும். அதாவது இந்த முறைக்குப் பெயர் முன் கூட்டியே திட்டமிடுதல். திட்டத்தோடு வகுப்பறைக்குச் சென்றால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதில் நீங்கள் மிகத் தெளிவாக இருப்பீர்கள். " என்று கூறிவிட்டு அமைதியாக எல்லோரையும் பார்த்து அதிபரையும் பார்த்தான். இப்போ அதிபர் ஆசிரியர்களைப்பார்த்து " இப்போ உங்களின் நேரம். நீங்கள் உங்களின் அபிப்பிராயங்களைச் சொல்லலாம்" என்றார் அதிபர். ஆசிரியர்கள் ஆளைஆள் பார்த்தார்கள். யாரும் அபிப்பிராயம் சொல்லவில்லை. சந்திரகாந்தாவும் எதுவும் சொல்லவில்லை.

" இது சமபந்தமான பயிற்சிகளை கபிலன் உங்களுக்கு நடாத்துவார். அத்தோடு இது சம்பந்தமாக வகுப்பறைகள் இயங்குகின்றனவா என்பதை கபிலனே மேற்பார்வை செய்வார்" என்றும் அதிபர் கூறிவைத்தார்.

இது கபிலன் எதிர்பார்க்காத ஒன்று. அங்கு கபிலனைவிட கூடுதல் காலம் வேலை செய்த ஆசிரியர்கள் அங்கு இருக்கும்போது தன்னிடம் இந்தப் பொறுப்பைத் தந்தது பல பிரச்சினைகளை உருவாக்கப்போகிறது என்று தனக்குள் கபிலன் நினைத்துக் கொண்டான்.

கூட்டம் முடிவடைந்தது. அதிபர் திருப்தியோடு போய்க் கொண்டிருந்தார். ஆசிரியர் சிலர் கபிலனை எதிரியாகவே எண்ணினார்கள். கபிலன் ஒரு சின்னப் பொடியன் தங்களுக்குச் சொல்லித் தருவதா என்ற கேள்வி எழுந்து நின்றது. இதற்கு சந்திரவதனா துணை நின்றாள். ஆசிரியர்கள் இரு பகுதிகளாகப் பிரிந்தனர். கபிலன் பக்கம் சிலர் நின்றனர். சந்திரவதனா பக்கம் சிலர் நின்றனர்.

வசந்திக்கு மிகுந்த சந்தோசம். அவள் பயந்தமாதிரி எதுவுமே நடக்கவில்லை. சந்திரவதனா மூக்குடைபட்டதுதான் மிச்சம். எல்லாரும் புறப்பட்டபோது வசந்தியும் கபிலனும் கதைத்துக்கொண்டே புறப்பட்டனர்.

" வசந்தி வாருமன் நேற்றுப்போல கடைக்குப் போயிட்டுப் போகலாம்" என்றான் கபிலன்.

வசந்தி அவனுடைய கோரிக்கைக்கு மறுத்து நேற்று அவளின் வீட்டில் நடந்த பிரச்சினைபற்றிக் கூறினாள்.

" கபிலன் நாங்கள் இனிக் கதைப்பதைக் குறைப்பம்" என்றாள்.

"ஏன்?" என்றான் கபிலன்.

" இல்லை பள்ளிக் கூடத்திலையும் எங்களைப் பற்றி கொஞ்சம் வித்தியாசமான கதை நடக்குது. கவனமாய் இருப்பம் எண்டுதான்" என்றாள் வசந்தி.

" அது தான் நல்லது வசந்தி. இனிக் கதைக்கிறதைக் குறைப்பம்" என்றான் கபிலன்.

இந்தப் பதில் வசந்தி எதிர்பார்க்காதது. அவளுக்கு ஏமாற்ற மாகவே இருந்தது.

" சரி.. கபிலன் நாளைக்குச் சந்திப்பம்" என்று கூறிவிட்டுத் தன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

( இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிறீரங்கன்

# கெற்றப் போல்



அந்தச் சின்னஞ்சிறு சோடிப் புறாக்களைக் காணும் போதெல்லாம் எனக்குள் ஒரு மகிழ்ச்சி தோன்றும். அவை எப்போதும் ஜோடியாகவே வரும், ஜோடியாகவே திரியும், ஜோடியாகவே உணவுக்கலையும் ஜோடியாகவே பறந்து செல்லும். பல நேரங்களில் ஒன்றையொன்று சிறகை விரித்து முணகிக்கொண்டு திரியும். அதன் காதல் வாழ்க்கை எனக்கு பிடித்துப்போயிருந்தது. ஒன்றையொன்று சிறுகளால் தாவியணைத்துச் செல்லங் கொஞ்சிக்கொள்ளும் அந்த வேளைகளில் அதன் இறகுகள் பனையோலையாற் செய்த கைவிசிறி போல அழகாய் இருக்கும். அதில் ஆண் எது? பெண் எது? என்று எனக்கு தெரியாது. எப்படித் அறிந்து கொள்வதென்று பல நாட்களாகத் திட்டமிட்டேன். இன்றுவரை கண்டறிய முடியவில்லை. அதில் ஒன்றையாவது தொட்டு,பிடித்து, அளைந்து விளையாட வேண்டும் என்று பேராசை கொண்டிருந்தேன்.

எங்கள் வீட்டின் வேலிகள் பணக்காரர்கள் வாழும் கொழும்பு போல சீமெந்தால் ஆனதல்ல. வெறும் செத்தைகளும் பொத்தல் விழுந்த பனையோலை வேலிகளுமாய்த் தானிருக்கும். குறுக்கே கரள் ஏறிப்போன முள்ளுக் கம்பிகள் காவலிருக்கும். ஆங்காங்கே கருக்கு மட்டைகள், கழற்றி எறிந்த மோட்டார் சைக்கிள் செயினைப் போல துருவேறிக் கிடக்கும். பக்கத்து வீட்டுக்காரர் தன் குமர்ப் பெட்டைகளைப் பார்க்கக்கூடாதென்று பார்த்துப் பார்த்து வேய்ந்த வேலியோ என்னமோ? யாருக்குத் தெரியும். ஆனால் எனக்கு அவரின் குமர்ப் பெட்டைகளைப் பார்க்கும் வயதல்ல. என் வேடிக்கை எல்லாம் அதிகாலையிலே எங்கள் வீட்டிற்கும் கொல்லை போன்றிருக்கும் வயலுக்கும் நெல்மணி பொறுக்கவரும் புறாக்களைப் பார்ப்பதுதான். பக்கத்து வீட்டுக்காரரின் அந்தச் சீனச்சுவரில் வெகு நேரமாகக் குந்தியிருந்து ஆளாளுக்கு றோட்டம் விட்டு அதில் ஆபத்தில்லை என்ற பின்புதான் அவைகள் கீழுறங்கும். நான் ஆசையில் அவற்றை நெருங்க நெருங்க அவைகள் தங்கள் குண்டிகளை அசைத்து அசைத்து மிக வேகமாக நடக்கும். பார்ப்பதற்கு அது அழகாய் இருக்கும். கால்கள் செவ்வரத்தம்பூப் போல் சிவப்பாய் இருக்கும். அவற்றின் விரல்கள் கூட செவ்வரத்தை மொட்டுப்போல தான் இருக்கும். மேனியில் கறுப்பும் சாம்பலும் கலந்த சின்னச் சின்ன வட்டவடிவான பொட்டுக்கள் போன்ற புள்ளிகள் ஒட்டியிருக்கும். எப்படியாவது எனக்கு அவற்றைப் பிடித்துவிட வேண்டும் என்ற ஆசை பெருக்கெடுத்துக் கொண்டே இருந்தது.

எங்கள் வீட்டில் ஒரு முள் முருங்கைச் செத்தல் மரம் பட்டுப் போகுமா? உயிர் பிழைக்குமா? என்று தெரியாமல் நீண்ட நாட்களாகச் சீவியம் நடத்திக்கொண்டிருக்கிறது. சிலவேளைகளில் அவைகள் ஜோடியாகப் பறந்து அதன் உச்சியில் அமர்ந்துகொள்ளும். அந்த முள்முருங்கை பார்ப்பதற்கு அழகாய் இருக்கக் கூட மாட்டுது. ஒரு வித பச்சைக் காவிக் கலரில் இருக்கும். இடையிடையே வெள்ளை அடித்த சுவர் மழையில் நனைந்தது போல வெண் பூச்சுக்கள் ஒட்டியிருக்கும். அந்த முள் முருங்கை இருந்திட்டு எப்பவாச்சும் பூக்கும். அதன் பூக்கள் கூடத் தேன்சிட்டுப் போல அழகாக இருக்கும். ஒரு நாள் கெற்றப்போல் கட்டி அந்தப் பூக்களை அடித்து விழுத்தினால் என்ன என்று யோசித்தேன். ஆனால் எனக்குத்தான் கெற்றப்போல் கட்டத்தெரியாதே. என் நண்பர்களில் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிறீரங்கன்

கெற்றப்போல் கட்டி அதில் கல்வைத்து குறிபார்த்து அடிப்பார்கள். வளர்ந்தால் இவர்களை ஆமி, பொலிஸில் சேர்த்துவிடலாம் என்று கூட நான் நினைத்துக்கொள்வதுண்டு. அம்மாவிடம் கேட்டேன். "கெற்றப்போல் கட்டினால் கால அடிச்சு முறிப்பன் என்றார்" கோல் எடுத்த பிள்ளை குருட்டுப் பிள்ளை என்றார். அதென்னம்மா கோல் எடுத்த பிள்ளை என்றேன். கெற்றப்போலின் அடிப்பகுதி ஒரு மரக்கட்டையால் செய்யப்பட்டு இருக்கும் ஆங்கில எழுத்து வீயைப் போல இருக்கும். அதுதான் குறிவைக்கப் பிடிக்கும் கெவர் . அதைத்தான் அம்மா கோல் என்றும் அதைத் தூக்கினால் தூக்கும் நான் குருடன் ஆவேன் என்றும் என்னை எச்சரித்தார். ஆனாலும் கெற்றப்போலின் மீதான என் ஈர்ப்பில் மாற்றமில்லை. அம்மாவுக்குத் தெரியாமலாவது கட்டிவிடவேண்டும் என்ற எண்ணம் முதல்மழையில் முளைத்த காளான் போல நாளுக்கு நாள் வேர்விட்டு வளர்ந்தது.

ஒரு நாள் விதுரன் எங்கள் வீட்டிற்கு வந்தான். அவனது காற்சட்டைப் பொக்கட்டுக்குள் ஒரு மிதப்புத் தெரிந்தது. "என்னடா பொக்கட்டுக்குள் என்றேன்" கெற்றப்போலடா என்றான். எனக்கு ஆர்வம் அதிகரித்தது. ஆனால் அம்மா கண்டாப் பேசுவா! அதனால் அம்மா குசினிக்குள் போன சமயம் பார்த்து வெளியில் எடுத்துக் காட்டச் சொன்னேன். பார்க்கவே அழகாய் இருந்தது. ஒரு கட்டையை வெட்டிச்சரி சமனாகச் சீவி ரியூப் துண்டுகளால் வரிந்து கல் வைக்கத் தோல் செய்து பார்ப்பதற்கே அழகாய் வைத்திருந்தான். "எனக்கு இதைத் தாறியா? கேட்டேன். "இல்ல, எனக்கு இது ராசியானது". "நான், இதைக் கட்டி இரண்டு கொக்குகள் ஒரு மைனா சில புனில்கள், அணில்கள் அடித்திருக்கிறேன் என்று அளந்துவிட்டான்". "உனக்கு வேணுமெண்டால் இதைப்போல ஒண்டு கட்டித்தாரன்" என்றான். இறுதியில் அவன் சொன்னது மட்டும் எனக்குப் பிடித்திருந்தது. எனக்கு முகத்தில் சிரிப்பு மின்னல் வெட்டிப் பாய்ந்தது. "இது கெற்றப் போலா? இல்லைக் கெட்டப் போலா என்று கேட்டேன். அடேய் நீ என்ன தமிழ் சேர மாதிரிக்கேக்கிறாய். கெட்ட பொல்லுத்தான் பின்னாளில் கெட்டப்போலாக,கெற்றப்போலாக மாறியதாகத் தன் தமையன் சொன்னதைச் சொன்னான். இதற்குத் தமிழில் எறிகவண் என்றும் ஒருபெயருண்டு என்று சொல்லிச் சிரித்தான். எனக்கு அவனிடமிருந்து விளக்கமெல்லாம் தேவையில்லை எனக்கு வேண்டியதெல்லாம் "கெற்றப்போல்தான்".

"தம்பி, விதுரனை வரச் சொல்லு, இந்தா.. இந்தப் பிளேண்டியக் குடியிங்க. இருவருக்கும் ஊற்றிவைத்துவிட்டு அம்மா அழைத்தார். நாங்கள் எங்கள் பிராக்கில் இருந்தோம். "இந்தா, இஞ்ச வாங்கடா ரெண்டு பேரும். பெரிய ஆக்கள் மாதிரி ரகசியம் கதைக்கிறாங்கள். "வாங்கடா, வந்து இந்தப் பிளேண்டியக் குடியுங்கடா" தனக்கேயுரிய பாணியில் அதட்டிப் பின் அன்போடு உபசரித்தார். "நாங்கள் கெற்றப்போல் கட்டப் போறம் எண்டு மட்டும் தெரிஞ்சுதோ மனுசி எனக்கும் அடிச்சு விதுரனுக்கும் சாத்துவா! நசுக்கிடாமல் போய்ப் பிளேண்டியக் குடித்தோம். எனக்கு ஒவ்வொரு தடவையும் உறிஞ்சி உறிஞ்சித் தேத்தண்ணியை உள்ளனுப்பும் போது கெற்றப்போல் கைக்குக் கிடைத்துவிட்டதாகவே மகிழ்ந்தேன். அடுத்த நாள் விதுரனிடம் முன்னெப்போதோ வீட்டில் சேர்த்துச் சேர்த்துப் பதுக்கி வைத்திருந்த இருபது ரூபாத் தாள் ஒன்றைக் கொடுத்தேன். அதில் இருந்த ஆந்தை என்னை முழுசிப் பார்த்தபடி இருந்தது.

அவன் பரந்தன் சந்திக்கு ஊடிப்போய் ஒரு றிம் பட்டியும், பழைய சைக்கிள் ரயர்ரியூப்பின் நீளத் துண்டுகளும் கொண்டு வந்தான். இளம்பச்சை றிம்பட்டி பார்ப்பதற்கு அழகாயிருந்தது. எனக்குப் புழுகம் அதிகரித்தது. ஒரு பெரிய கத்தியை எடுத்துகொண்டுபோய் வேலியில் இருந்த பூவரசங் கதிகாலை வெட்டினோம். விழுந்த கிளை ஒரு தும்புத் தடி சைசில் இருந்தது. பின்னர் இருவருமாகத் தோலை உரித்தோம். உரித்ததும் அது வெள்ளையாக வழுவழுப்பாக இருந்தது. அதைச் சுற்றி வழுக் வழுக்கென்ற ஒரு வெண்ணீர் பிசுபிசுத்தது. கத்தியால் அதனை வழிதெடுத்தான் விதுரன். சொற சொறவென்றிருந்த பூச்சுப் பூசாத எங்கள் வீட்டுக் கக்கூஸ் சுவற்றில் சீவிய மரக்கெவர்களைக் கொண்டுபோய்த் உரசி உரசித் தேய்த்தோம். விதுரன் அளவெடுத்து மூன்று விரல்களை நடுவில் வைத்துப் பார்த்து அதைக் கட்டத் தொடங்கினான். கொஞ்சங் கொஞ்சமாக அது உருப்பெற்றது. ரீப் துண்டினால் இறங்கு வரிசையைப்போல் வரிந்து வைத்த அதன் தேகம் ஒரு கருங்குதிரை போல் காட்சியளித்தது. புத்தகப் பையின் தோள்பட்டையின் ஒரு துண்டை எடுத்துத் தோல் வைத்தான். எனக்கென்றொரு கெற்றப்போல் உருவானது. அதைப் பக்குவமாகக் கட்டிமுடித்ததைவிட அம்மாவின் கண்களுக்குப் படாமல் ஒழித்துவைப்பதில் தான் அதிக சிரத்தை எடுத்தேன். ரியூசன் போகும் நேரமெல்லாம் பொக்கட்டுக்குள் அதை வைத்திருந்தேன். அப்படி வைத்திருப்பது எனக்கொரு இனம்புரியாத பலத்தைக் கொடுத்தது. வீதியில் நிற்கும் மாடுகளின் முதுகைக் கொத்தும் காகங்களைக் குறிவைத்தேன். அவை தம் ஒற்றைக் கண்ணால் தூக்கிப் பார்த்துவிட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிறீரங்கன்

பறந்தன. நான் எனக்குள்ளே ஒரு வீரனைப் போல வீரியம் பெறத்தொடங்கினேன்.

முருங்கைப் பூக்கள் பூத்துக்கிடக்கும் அந்த முருங்கை மரத்தின் காய்களைக் குறிவைத்துப் பழகினேன். பல போராட்டத்தின் பின்னர் ஒரு கல்லுப் போய் அந்த இலக்கைத் தாக்கியழித்தது. கொத்தாகச் சில பூக்களும் கொட்டைகளும் பொலு பொலுவென்று வீழ்ந்தன. ஓடிச்சென்று புறக்கினேன். அதன் சாம்பல் நிறக் கொட்டைகள் பார்ப்பதற்கு குயில் முட்டைகள் போல் அழகாய் இருந்தன. பின்னேரம் விதுரன் வந்ததும் ஆர்வமாய்க் காட்டினேன். அவன் அதைச் சுவரில் தேய்த்து என் துடையில் வைத்தான் எனக்குச் சுள் என்று சுட்டது. கோபமும் வந்தது. ஆனால் சிரித்துக் கொண்டேன். இப்பொழுதெல்லாம் எனக்கு இலக்கு வைப்பது இலகுவாகிவிட்டது.

அந்தப் புறாக்கள் அடுத்த நாள் ஜோடியாக வந்தன. வேலியில் கொஞ்ச நேரம் காற்றுவாங்கிவிட்டு வயலுக்குள் இறங்கின. நேற்றிரவு பெய்து ஈரலித்துக் கிடந்த காணியில் நெல்மணிகள் பொறுக்கின. அம்மா நிற்பதால் என்னால் கெற்றப்போலை எடுக்க முடியவில்லை. ஆனால் இப்போது அதில் ஒன்றையாவது அடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது. ஒரு ரகசிய உளவாளி போல அப்புறாக்களை நோட்டமிட்டேன். அம்மா கிணற்றடியில் துணி துவைக்கும் நேரம்பாரத்து வீட்டுக்குள் மிக வேகமாக ஓடிச்சென்று கெற்றப்போலை எடுத்துக்கொண்டு வந்தேன். ஆஹா! என்ன அதிசயம் அவை எங்கள் காணியின் ஒரு மூலையில் கூடு கட்டி வைத்திருந்தன. நான் கூட்டின் அருகே வருவதைக் கண்டதும் அவை காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தன. கூட்டின் அருகில் சென்று பார்த்தேன். இரண்டு அரிசிமா இடியப்பத்தைச் சேர்த்து வைத்தாற் போல இருந்தது அவற்றின் கூடு. அவை வேப்பங்குச்சிகளாலும் பாலைக் குச்சிகளாலும் கட்டப்பட்டிருக்கவேண்டும். சடுதியாக மரத்தில் ஏறி அவற்றின் கூட்டைப் பார்த்தேன். முட்டைகள் ஒன்றும் இல்லை. கூட்டைத் தொட்டுப் பார்த்தேன் ஒரு கணச் சூடு தெரிந்தது. பெண் புறாவின் சூடுதான் அது என்பதை உணர்ந்தேன். ஒரு மெல்லிய வெண்மையான இறகு மட்டும் அந்தக் கூட்டில் தனித்துவிடப்பட்டிருந்தது.

இரண்டு நாட்கள் ஓயாத மழை. எங்கட ஊரில் இப்பிடித்தான் நேர காலம் தெரியாமல் மழை பெய்யும் அதிலும் இந்த ரேடியோக்காரன் எச்சரிக்கை விட்டால் பெய்யவே பெய்யாது. ஆனால் அவங்கள் ஒண்டும் சொல்லாட்டில் திடீரென்று வந்து போகும். புறாக்கள் இப்போது நனைந்து குளிரில் வாடும் என்று நினைத்தேன். அதன் முட்டைகள் குளிரிற்கிடந்தால் கெட்டுக் குஞ்சு பொரிக்காது போயிரும் எனவும் நினைத்தேன். மூன்றாம் நாள் காலையில் விடிந்ததும் கூட்டைப் பார்க்கப் போனேன். பெண் புறா குர் குர் என்று தன் சாம்பல் நிறத் தொண்டையால் முன் கழலை வந்து வந்து போகக் குறுகுறுத்தது. ஆண்புறாவைத் தேடினேன் அது இருந்த சிலமன் இல்லை. ஆனால் எங்கோ அருகில் தான் ,ருக்கும் என்பது மட்டும் எனக்குத் தெரியும். கெற்றப் போலை மறந்து வந்து விட்டேன் இல்லை என்றால் கூட்டுக்குள் இருக்கும் இந்தப் புறாவை அடித்திருப்பேன். வேகமாக ஓடி வந்து கெற்றப்போலை எடுத்துக்கொண்டு போனேன். “எங்கடா போற, எங்கால உந்தக் கெற்றப்போல், ஆரிட்ட வாங்கின்னி உன்னச் சொன்னானெல்லா இதுகளை எடுக்காத எண்டு” சனியனே பாவங்களைச் சேர்க்காத இந்தச் சனியன் பிடிச்ச கெற்றப்போலை கொண்டு போய் எறி” வாயால் காவடி ஆடி முடித்தார் அம்மா..! என் வீரியம் வீழ்ந்து போனது. இந்தப் புறாக்கள் போனாலென்ன எப்பையாவது ஒருநாள் ஒரு புறாவையெண்டாலும் அடிச்சு விழுத்துறதுதான் மனதிற்குள் நினைத்துக்கொண்டு திரும்பி வந்தேன்.

பின்னேரம் அம்மா வீட்டிலில்லாத நேரம் பார்த்து விதுரன் வந்தான். அவனது பொக்கட்டுக்குள் வழக்கமபோல கெற்றப்போல் பொம்மிக்கொண்டிருந்தது. காலையில் நடந்ததைச் சொன்னேன். “வா, நான் அடிச்சுத் தாறன்” சொல்லிக்கொண்டே கொல்லையைத் தாண்டிச் சென்றான். அம்மாவைப் பார்த்துப் பார்த்து நான் கொல்லையில் இருக்கும் தொட்டாவாடிகளைக் கூடக் கவனிக்காது அவன் பின்னால் சென்றுகொண்டிருந்தேன். அம்மாவின் அரவமோ அசைவோ எதுவுமில்லை. என்னுடைய கைகளில் கெற்றப்போல் இல்லை. “அம்மா வாறதுக்குள்ள அடிச்சு உப்புப் போட்டுப் பொரிச்சு சாப்பிடோணும்” எனக்கு இப்பவே நாக்கூறியது. “கதைக்காமல் வா” மெல்லச் சொல்லிக்கொண்டே விதுரன் முன்னோக்கி நடந்தான். நான் இரண்டடிகள் தயங்கி வந்தேன். வாலியைக் கொல்ல ஆச்சாமரத்தின் பின்னால் நின்ற இராம லக்ஸ்மனரைப் போல நடந்தோம். கூடு இருக்கும் இடத்தைக் காட்டினேன். தாய்ப்புறாவைக் காணவில்லை. சற்று, கண்களைச் சுற்றி நோட்டம் விட்டோம் அருகிலுள்ள மரக்கொப்பில் இரண்டு புறாக்களும் அமர்ந்திருந்தன. விதுரன் தன் கையில் வைத்திருந்த மாபிளைத் தலைப்பினுள் வைத்து அப்புறாக்களில் ஒன்றைக் குறிவைத்தான். தன் காதுவரை நீளமாக இழுத்து ஒரு சில கணங்களில் கையை விட்டான். மின்னலை விட வேகமாகப் புறப்பட்ட அந்த மாபிள் ஒரு புறாவைத் தாக்கியது. மற்றைய புறா வீரிட்டுப் பறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவந்தன்

நான் ஓடிச் சென்று அதைத் தூக்கினேன் விதுரன் என் பின்னால் வந்து ஒரு வெற்றிச் சிரிப்போடு அதனைப் பார்த்துவிட்டு "இது, பெண் புறா" என்றான். எப்படிச் சொல்கிறாய் என்றேன் அதன் இறகுகள் வான் நோக்கி இருக்கவில்லை காலில் சூரியன் போன்ற சிறகுகள் இல்லை என்று பல காரணங்கள் சொன்னான். நான் அடிபட்ட புறாவைப் பார்த்தேன் அதன் சிறகு உடைந்து இரத்தம் தோய்ந்திருந்தது. உடல் குருதி வெப்பத்தில் துடிதுடித்து அனுங்கிக்கொண்டிருந்தது. பார்ப்பதற்குப் பாவமாய் இருந்தது. இன்னும் சில கணங்களில் செத்துவிடுமென்றான். எனக்கு அம்மா சொன்னதற்கு அர்த்தம் இப்போது தான் புலப்படத் தொடங்கியது. புறாவை நிலத்தில் போட்டு விட்டுக் கூட்டை எட்டிப் பார்த்தேன். ஆந்தப் புறா இட்ட முட்டைகள் இரண்டும் உடைந்து கோதுடைந்து கிடக்கும் இரண்டு புளியம்பழங்கள் போல குஞ்சுகள் பொரித்துக் கிடந்தன. அவை தாயின் வருகைக்காகப் பசியோடு அங்கலாய்த்துக் கொண்டிருந்தன. பாவம் அவை கண்கள் கூட இன்னமும் திறக்கவில்லை. அவசரப் பட்டுவிட்டோமே அவசரப்பட்டுவிட்டோமே என்று உள் மனம் உறுத்தியது. மரத்திலிருந்து இறங்கியது கூடத் தெரியவில்லை. வா, உங்கட அம்மா வாறதுக்குள்ள பொரிப்பம்" விதுரன் சொன்னான். "புறாவை நீயே கொண்டு போ என்றேன்" "ஏன் உனக்கு வேண்டாமா?... பொரித்துத் திண்டால் ரேஸ்ட்டா இருக்கும்"... "வேண்டாம், இந்தா! இந்தக் கெற்றப்போலையும் சேர்த்து நீயே வச்சுக்கொள்" வீட்டுக்குள் ஓடினேன். எனக்கு அழ வேண்டும் போல் இருந்தது. யாரும் சொல்லாமலே என் தவறு எனக்கு விளங்கியது. வெளிக் கேற்றின் கதவைத் திறந்துகொண்டு அம்மா வருவது தெரிந்தது. ஓடிச் சென்று கட்டியணைத்து அழுதேன். அம்மா ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டிருந்தார்.

◇◇◇◇◇

# பங்கர்

"அம்மா! தலையக்குனி.... குண்டு மோசமா விழுது...." ஓய்வில்லாமல் மழை பெய்து கொண்டுதான் இருந்தது. ஆச்சிபுரத்திலிருந்து தவண்டு துவண்டு வள்ளிபுரம் வரைக்கும் இந்தச் சனக்கூட்டம் பதறியடிக்கிறது. இதற்கிடையில் மழைதான்.... இது ஒன்டும் தண்ணீர் மழையில்லை. செல்மழை, குண்டுமழை எப்பிடியும் உயிர் பறிக்கும் வக்கிரத்தில் வந்து விழும் கொத்துக்குண்டு மழை.

பாப்பாத்தியும் மகள் ரஞ்சினியும் அந்த சனக்கூட்டத்தில் இருவர். ஒரு சைக்கிளும் அதில் போகிற இடத்தில் கொட்டில் போட தறப்பாளும் கட்டுறதுக்கு நைலோன் கயிறொண்டும் ரெண்டு மூண்டு சோடி உடுப்பும் புட்டுபானை, நீத்துப்பெட்டி இதோட கொஞ்சுன்டு அரிசியும், பருப்பும் இருக்கு. ஆட்களை அடையாளப்படுத்துற அடையாள அட்டை ஆவணங்களும் மனுசன்ட மாவீரர் சம்பளம் எடுக்கிற தமிழீழ வங்கி கணக்கு புத்தகமும் கொண்டு பயந்து துடித்து கந்தகப் புகை மூட்டத்தை கிழித்துக் கொண்டு வருகினம். "குயிங்..... குயிங்....." என்று போகும் இந்தக்குண்டுகள் எப்பத்தான் நிக்கும்.. ஐயோ...! ரோட்டுல இடம்பெயர்ந்து போரதுகள் "திடீர்.. திடீர்.." என்டு குண்டு. பட்டு விழுதுகள், செத்துப்போகுதுகள். பாவம்! யாரோ குடும்பமா செல் விழுந்து செத்துக் கிடக்குதுகள். அந்த வானம் இரக்கமற்றது. கரும் புகைகள் சூழ்ந்து கருங்கோலமாக இருந்தது. பனைமரங்கள் எரிந்து மொட்டைப் பனையாகிப் போகின்றன. இரத்தவாடை காற்றில் மேலெழுந்தவாறு மூக்குகளை வந்தடைகிறது. "வற்றாப்பளத்தாயே எங்களக் காப்பாத்து..!" பாப்பாத்தியின் அழுகுரலும் அந்த வெளியில் வெளிப்படுகிறது. குண்டு கூவிவரும் சத்தம் கேட்டதும் சைக்கிளை அதிலே போட்டுட்டு ரோட்டிலே விழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவந்தன்

படுத்து விடுகிறார்கள். காலையில் தான் ஒரு இடத்திலிருந்து இன்னொருடத் துக்கு வந்து சேர்ந்தம். அங்கையும் ஆமி வந்திட்டான். அங்கையும் செல் விழுது. பக்கத்து வீட்டில் விழுந்த செல் எங்களுக்கு மேல விழுந்திருக்கலாமே....! கடைசியில இப்பிடியே போனா கடல்தான் வரும் அங்க விழுந்து தான் சாகிறதா....? பாப்பாத்தி மனம் சோர்வடைந்து விட்டது. மகள் ரஞ்சினி சின்னப்பெட்ட. இதெல் லாம் அதுகளின்ட தலையெழுத்தா...? இருவரும் அந்த சைக்கிளை தள்ளியே களைத்து விட்டனர். எப்பிடி என்றாலும் இந்த களத்தைக் கடந்துவிட வேண்டும். சைக்கிளை பதுங்கிப்பதிங்கி தாயும் மகளுமாய் மாறிமாறி தள்ளிக் கொண்டு நடக்கிறார்கள். கட்டடம் ஒன்று பாப்பாத்தி கண்களுக்கு தெரிகிறது. அது வள்ளிபுரம் சங்கக்கடை.அதையும் குண்டுகள் விட்டு வைக்கவில்லை. மேல் விழுந்த செல் கூரையை கிழித்து உள்ளே சென்று வெடித்திருக்கிறது. கட்டிடத்துக்கு உடைந்த பரிதாபநிலை. உள்ளே கிடந்த அரிசி மூட்டைகள் வெளியில் வந்த பாப்பாத்தியின் கண்களுக்கு நன்கு படுகிறது. அதற்குள் சில அரிசி மூட்டைகள் பிதிங்கி சிரித்துக் கொண்டிருந்தன. இவை பசியோடி ருந்த பாப்பாத்தி கண்களுக்கு ஒளி விடும் சோற்றுப் பருக்கைகளாக தென்பட்டிருக்கும். பசிக்கு யோசிக்கவா அந்த யவ்வனப் பொழுதுகளில் நேரம் இருந்திருக்கும்.

குண்டுகள் நிற்பதாக இல்லை. இப்போது இன்னும் கூடி விட்டது. கிட்டியில் வந்து விழுகிறது. துப்பாக்கி ரவைகள் கூவுகிறது. சின்னக் குழந்தைகள் சிறுநீர் கழிப்பது போல கண் மூடித்தனமாக குண்டுகள் விழுகிறது.

"அம்மா என்னால உருட்டேலாது."

ரஞ்சினி தன் ஆழ்கிடை பலத்தையும் வைத்து தள்ளிவிட்டாள். இப்போது களைத்துப் போய்விட்டாள். சைக்கிள் சில்லிலும் காற்றுகள் குறைந்துவிட்டது. இனியும் அதனால் ஓட முடியாது. பாப்பாத்தியின் கண்கள் அகல விரிகிறது. ஒரு நிழலை நோக்கி அவள் உள்ளம் இடம்பெயர நினைக்கிறது. பொதி சுமக்கும் மாடுகள் போல மூசிக்கொண்டாள். வீதியின் அருகே சடைத்து வளர்ந்த மாமரம் ஒன்று. அதன் கீழ் கோடு போல் வடிவில் ஒரு சிறிய பங்கர். அதில் சில தலைகள் வெளியில் தெரிவதாய் தென்பட்டது. இதைக் கண்ட பாப்பாத்தியின் கண்கள் உடனே அதை நோக்கிப் புறப்படத் தொடங்கிற்று. அது மலையகத்தைச் சேர்ந்த கந்தசாமி குடும்பத்தார். அவர்கள் மொத்தமாக ஐந்து பேர் இருந்தனர். இடங்கி முடங்கி காற்றுகள் இல்லாத அந்தக்கிடங்கில் சிறு குழந்தைகளும் இருந்தனர். அவர்கள் கந்தசாமியின் குழந்தைகள். கண்டியில் இருந்து வந்த கந்தசாமி கிட்டத்தட்ட இருபது வருடங் களாக இங்குதான் இருக்கிறான். தன் குடும்பத்தின் பாதுகாப்புக்காக மாமர வேர்களைக் கிழித்து தனியாளாய் அந்த பங்கரை வெட்டியிருக்கிறான். அந்தச் செல் வீச்சுகள் ஓயவில்லை.

வெளியில் ஏதோ சத்தம்!

கந்தசாமி தன் தலையை வெளியிலே நீட்டிப்பார்த்தான். அவனுக்கு அந்த அவலம் நன்கு புரிந்தது. செல் முழக்கம் நிற்காது. அந்த துப்பாக்கி ரவைகள் நிக்காது. கந்தசாமி பங்கரில் இருந்து வெளியே வந்தான். அவன் கறுத்த உருவத்தில் இரு வாட்டி மண்துகள்கள் படிந்தி ருந்தது. திடகாத்திடமான உருவம். அவன் அணிந்திருந்த வெள்ளைநிற பெனியன் சற்று நிறம் மாறிவிட்டது. வேர்வைகள் படிந்த நெற்றியில் ஒரு இழுவை வேர்வை கையோடு நிலத்தில் போய் விழுந்தது. பாப்பாத்தியும் ரஞ்சினியும் தங்குவதற்கு ஓர் நிழல் அமைந்து விட்டது. பறந்து வரும் குண்டுகள் தணியும் வரை இவர்களும் இருந்து விட்டுப்போகட்டும் என்று கந்தசாமியும் அவன் குடும்பமும் எண்ணிக் கொண்டனர்.

கந்தசாமியால் உள்ளே இருக்க முடியவில்லை நெரிசல் அதிகம். யாரோ, ஒருவர் வெளியில் நின்றுதான் ஆக வேண்டும். பங்கரில் இடம் போதாது. அப்போது தான் கந்தசாமி இந்த பங்கரை இன்னும் கொஞ்சம் நீளமாக தோண்டியிருக் கலாம் என்று தோணிற்று. கந்தசாமி தாராள மனசுக்காரன். இன்னும் குண்டுகள் கிட்டவாக விழ ஆரம்பித்துவிட்டது. அங்கே சில இடங்களில் அழுகுரலும் கூக்குரலு மாக இருந்தது. பங்கர் தோண்டிய மண் குவியல் வித்தனில் கந்தசாமி மறைந்தும் மறையாதவனுமாக பதுங்கியிருந்தான். அப்படிச் சற்று நேரம் வரை தான் இருந்திருப்பான்.

"அம்மா......" என்ற சத்தம் பங்கரில் கந்தசாமியின் கடைசி குழந்தையின் காது வரை வந்து சேந்திருக்கும். அது கந்தசாமியின் குரல். இப்போது குண்டுகள் இன்னும் நெருக்கமாய் விழ ஆரம்பித்து விட்டது.

அதுதானே கந்தசாமிக்கு எவ்வளவு தாராள மனசு பாத்தியலோ....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக் குறுங்கதை

ஷெல்லிதாசன்

# அதே வெள்ளைக் கொக்குகள் ஒற்றைக் காலில்......!



பசுமைப் புரட்சிக்கான
அழைப்பை விடுக்கும்
தெருவோரச் சுவரொட்டி
அழகழகாக.
வீட்டையும் நாட்டையும்
மீட்டெடுக்க வாருங்கள்
வெற்றுத்தரை யெல்லாம்
பயிர் செய்வோம்
வீட்டுத்தோட்டம் நாம்
செய்வோம்.
சில ஆண்டுகளுக்கு முன்னும்
இப்படியோர் விளம்பரம்.
அந்தவிளம்பரத்தைப்
பார்த்தவுடன்
வீறிட்டெழுந்தது ஒரு விடலை
வேகம் அன்று.

பசுமைப் புரட்சியில்
பார்வையாளனாக இல்லாமல்
பங்காளராக வேண்டுமென்ற எண்ணம் என்னுள்ளே
உதயமாக உடன் களத்தில் குதிக்க ஆயத்தமானேன்
துடிப்பான வயது அது.
எனது இல்லத்தின் அருகேயிருந்த
வெற்றுத் தரையை கொத்திப் புரட்டி
பண்படுத்தி பசளையிட்டு களைச்சு விழுந்து
ஒரு "குட்டி விவசாயி" யாக
என்னை நானே பிரகடனம் செய்து......
நிமிர்ந்து எழுந்தபோது......என்னை
தட்டிக்கொடுப்பதுபோல
வீடு வீடாக சென்று விதைகளை விநியோகிக்கும்
முகவர்கள் சிலர்என் வீட்டையும் தேடி வந்து
இலவசமாக எனக்கு விநியோகித்துவிட்டுச் சென்ற
விதவிதமான
விதைப் பொதிகளைக் கண்டு
மனம்பூரித்துப் போனேன்.
என்ன ஒரு கரிசனை இவர்களுக்கு

பசுமைப் புரட்சியில்...! கைக்கு வந்த விதைகளை
கவனமாகத் தொற்று நீக்கி
பண்படுத்திய நிலத்தில்
பாத்திகள் பலவற்றை அமைத்து
நடவு செய்தேன்.
நேரந் தவறாது நீரூற்றி
காத்திருந்தேன் பார்த்திருந்தேன்
அழகழகாய் தலை நிமிரப்போகும்
பச்சைக் குழந்தைப் பயிர்களின்
முகங்களைத் தரிசிக்கும் ஆவலில்..!
நாட்கள் கிழமைகளாக
கிழமைகள் மாதத்தை நெருங்கியும்
நடவு செய்த விதைகள்
மறந்தும் இமைதிறந்து பாராமல்
நீடுதுயிலில் நிரந்தரமாய்
நடவு செய்த மண்ணிலேயே
சங்கமித்து சேதனமாகிவிட....பண்பட்ட
நிலமெல்லாம்
பாழ்பட்டு மீண்டும்
புல் மண்டி எதிர்ப் புரட்சிக்கு உள்ளாக...
மனத்துள் ஒரு ஆவேசம் கொப்பளிக்க
கண்மூடிய விதைகளை
கனகச்சிதமாய் விநியோகம் செய்த அந்த
கொடையாளி முகவர்களை
இற்றை வரை தேடுகிறேன்....பசுமைப் புரட்சிக்கு
ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும்புள்ளிக்கு பாதியென்ற
நிபந்தனையை ஏற்ற முகவரிகள்

நேர்மையை நிலைநாட்டி எப்படி
தேசத்தில் தலைகாட்ட முடியும்...?
இப்போது மீண்டும் ஒரு பசுமைப் புரட்சியாம்
நாட்டை மீட்டெடுக்க....அதே வெள்ளைக் கொக்குகள்
ஒற்றைக் காலில் காத்து நிற்கின்றன..
பெரிய மீனாக மீண்டும் கொத்தியெடுத்து
இறகடிக்க....!

◇◇◇◇◇


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புச் சிறுகதை

அ. முத்துலிங்கம்

# கோடை மழை

இலங்கை 'மாப்பை' விரித்து வைத்து அதன் தலையில் யாழ்ப்பாணத்தை தேடிப் பிடித்து, சிகப்பு பென்சிலால் பெரியதொரு புள்ளி போட்டு, 'இதுதான்



கொக்குவில்' என்று பீற்றிக்கொள்ளும் அளவிற்கு பிரபலமானதல்ல எங்கள் ஊர்.

ஆனால் 'மாப்பை' எடுத்துப் பிரிக்காமல், பென்சிலால் கோடு இழுக்காமல், இது கொக்குவில் என்று சொல்லாமல் விடக்கூடிய அளவிற்குப் பிரபலமற்றது என்றும் கூறிவிட முடியாது.

அர்த்தநாரிசுவரர் போன்று, கொக்குவில் ஒரு பக்கத்திலும் சாயாமல், தனித்து தனக்கென்றொரு நாகரிகம் வைத்துக் கொண்டு இருப்பதாகத் தான் சொல்ல வேண்டும். கொக்குவில் என்றவுடன் சிலருக்கு 'கானா சேனா' வின் கோடா போட்ட நல்ல பளபளப்பான நாட்டுப் புகையிலைச் சுருட்டு ஞாபகத்திற்கு வரலாம். சிலருக்கு முறைப்படி காய்ச்சிய காரசாரமான கள்ளச் சாராயத்தின் நெடி நினைவுக்கு வரலாம். இது இரண்டிலும் அனுபவமில்லாத துர்ப்பாக்கி சாலிகள் பழைய பிரபல கொலைக்கேஸுகள் சிலவற்றை ஞாபகத்திற்குக் கொண்டு வந்து அனுபவித்து ரசிக்கலாம். ஆனால் கொக்குவிலுக்கு விஜயம் செய்த யாராவது அது மேற்கூறிய ஒன்றிலேதான் பிரபலமாயிருக்க வேண்டும் என்று கூறினால், அவருக்குக் கண்பார்வை 'கிராமப்போன் பிளேட்டா' அல்லது 'கிடாரச்சட்டியா' என்று வித்தியாசம் கண்டு பிடிக்கும் அளவிற்காவது இருக்குமா என்பது சந்தேகம் தான்.

ஒழுங்கைகளுக்குப் பேர் போனது கொக்குவில். அவற்றில்தான் எத்தனை ரகம்? வண்டிப்பாதை, மணல் பாதை, மக்கி ரோட்டு, கல்லுரோடு, முடுக்குத்தெரு, மூலைத்தெரு, குச்சுஒழுங்கை, குறுணிஒழுங்கை, ஒற்றைய டிப்பாதை, ஒன்றரையடிப்பாதை இப்படியாக இன்னும் பலப்பல.

இப்படிப்பட்ட ஒழுங்கைகளோ புழுதிக்குப் பேர் போனவை. அது மாத்திரமா? பிறந்தநாள் தொடங்கி மேற்கூறிய ஒழுங்கைகளோடு பழகியவர்களையே சிற்சில சமயங்களில் இவை ஏய்த்து விடுவதும் உண்டு. கொஞ்சம் அசந்து போனால் சரி. பழையபடி புறப்பட்ட இடத்துக்கே கொண்டு போய்ச் சேர்க்கும் அசாத்தியத் திறமை படைத்தவை. இந்த ஒழுங்கைகளில் சைக்கிள் சவாரி செய்வதற்கு அபூர்வப் பழக்கம் வேண்டும். கொக்குவிலைப் பிய்த்துக்கொண்டு போகும் கே.கே.எஸ் ரோட்டிலிருந்து இறங்கிய ஒருவர், புகையிலைக்காம்பு நெட்டி போல் பின்னிப் பின்னிக் கிடக்கும் இந்த ஒழுங்கைகள் வழியாகப் பிரயாணம் செய்து, மறுபடியும் பலாலி ரோட்டில் மிதப்பாரானால், அவர் புறப்பட்ட முகூர்த்தத்தில் ஒரு சுவீப் டிக்கெட் எடுத்திருக்கலாம் என்று துணிந்து கூறலாம்.

இப்படிப்பட்ட கிராமத்தில் சுரம் வந்தவனுடைய 'டெம்பரேச்சர் சார்ட்' போல இடைக்கிடை ஏறி இறங்கும் நாகரிகத்தில் சமீபத்தில் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாகரிகமானது ஒரு திடீர் வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனாலும் பொதுவாகப் பெண்களுடைய நாகரிகமானது, பின்னேரம் நாலு மணியானதும் சேலையைக் களைந்துவிட்டு 'கிமோனா' அணிந்து படலைக் காலைப் பிடித்துக் கொண்டு நிற்பதும், வெள்ளைக்கால் சுந்தையருடைய படலையடியில் யாராவது 'இளவட்டம்' சைக்கிளில் திரும்புவது தெரியத் தொடங்கும் போதே, உள்ளே ஓடி ஒளிந்து கொள்வதும் என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறது.

அவசரகாலச் சமயத்தில் சட்டத்தை மீறி, மதகுகள் மீது குந்தியபடியே அரட்டை அடிக்கும் ஆண்கள், அரைமைல் தூரத்தில் பட்டாளத்து 'வான்' முகப்பு லைட் மின்மினிபோலத் தெரியும்போதே அந்தர்த்தியனமாகும் அளவிற்கு வீரமும், தைரியமும் படைத்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைப் பற்றியோ கூறத் தேவையில்லை. கர்ப்பத்தடையைப் பற்றிய ஞாபகமே இல்லாமல் தாராள மாகப் பெற்றுப் போட்ட குழந்தைக் கணங்கள் ஒழுங்கைகள் எங்கும் நிறைந்திருக்கும்.

தாய்மார்களுடைய கையில் ஆறுமாதக் குழந்தை ஒன்று இருக்கும் போதே, வயிற்றில் இரண்டு மாதத்தில் ஒன்று விண்ணப்பித்துக் கொண்டு இருக்கும். ரெயில்வே லைன் கரைதான் குழந்தைகளுடைய விளையாட்டு மைதானம்.

தண்டவாளத்தின் மேல் வரிசையாக சோடா மூடியை அடுக்கிவிட்டு 'யாழ்தேவி' வரும்போது ஒளிந்திருந்து வேடிக்கை பார்ப்பதுடன் அவர்களுடைய ஆரம்ப விளை யாட்டு முடிவடைந்துவிடும்.

கொக்குவிலுக்குப் புதிதாக வரும் வாசகர்களுக்கு, கொக்குவில் எங்கே ஆரம்பமாகிறது என்ற சந்தேகம் எழலாம். காலை 6.20 க்கு யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படும் கொழும்புப் புகைவண்டியில் பிரயாணம் செய்திருக்கும் அன்பர்கள், புகைவண்டி அடுத்துவரும் சுடலை ஒன்றைக் கடக்கும் போது, நெடிதுயர்ந்த பனைகளின் பின்னால் சுகாதார இன்ஸ்பெக்டரை நாளது வரை ஏய்த்து வந்த நூற்றுக்கணக்கான தலைப்பாகைகள் மிதப்பதைக் காணத் தவறியிருக்கமாட்டார்கள். சந்தேகமின்றி, கொக்குவில் அங்கேதான் ஆரம்பிக்கிறது.

கொக்குவிலின் மேலான கைத்தொழில் சுருட்டுத் தொழில்தான் என்றாலும், சுருட்டுத்தொழில் செய்து பணக்காரரானவர்களை விரல்விட்டு எண்ணுவதானால் கைகளே தேவையில்லை. கல்வியும் இதே நிலைதான்.

'கிளறிக்கல்' ஒவ்வொருத்தருடையதும் மகோன்னத தமான லட்சியம். தட்டித்தவறி யாராவது ஒருத்தர் எஸ்.எஸ். சி பாஸ் செய்து விட்டால் நல்லூர் கந்தசாமியருக்கு ஒரு சங்கரார்ச்சனை லாபம் என்று அர்த்தம்.

ஆண்களின் கதியே இப்படி என்றால் பெண்களைப் பற்றிக் கூறவே தேவையில்லை. குறைந்தது நாலு பிழைக ளுடன் விலாசதாரருக்குக் கிடைக்காத வகையில் ஆங்கிலத்தில் தந்தி எழுதும் அளவிற்கு அவர்களுக்கு அமோகமான கல்வி அறிவு இருக்கிறது.

இருந்தும் என்ன? நாகரிகக் கண்கொண்டு பார்க்கும் பேர்வழிகள் கொக்குவிலின் பிரபல்யத்தை மாத்திரம் எப் போதும் ஒப்புக்கொண்டதே கிடையாது.

சின்னாச்சிக் கிழவி, ஒன்றரை சஷ்டியப்த பூர்த்தி மதிக்கக் கூடிய தோற்றம். எனினும் அந்த நாட்களில் ஆயிரம் புகையிலைக் கன்றுக்குப் பட்டை பிடித்த தேகக்கட்டு இன்னமும் குலைந்து விடவில்லை. தொழில் ஊர்வம்பு 'பார்ட் டைமாக' பலாவிலை குத்தல், 'தொணதொணப்பு' நச்சரிப்பு, பஞ்சம்கொட்டுதல் போன்ற கிழவிகளுக்கு இயல்பான லட்சணங்களுக்குக் குறைவில்லை.

'கோச்சி வரும், கவனம்' எச்சரிக்கையை லட்சியம் செய்யாமல் எதிரே வரும் ரயில்வே கடவையைக் கடந்து இடது சந்தியில் திரும்பினால் 'இங்கே ஆர்மோனியத்தை ரிப்பேர் செய்யப்படும்' என்ற போர்டு பலகை ஒன்று பயங்கரமாகத் தமிழுக்கு ரிப்பேர் பார்த்தபடியே தொங்கும். அதற்கு எதிர்ப்புறம் ஒரு குச்சு ஒழுங்கை.

பகல் பன்னிரண்டு மணிக்குக்கூடத் தனியாகப் போவதாக இருந்தால் நெஞ்சம் 'படக் படக்' என்று இடிக்கும். ஜனப் புழக்கம் இல்லாதபடியால் பாதை நடுவே அங்கங்கே இக்கிரியும் நாகதாளியும் சுகம் விசாரிக்கும்.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மேலும் போனோமென்றால் பிரமாண்டமான கள்ளி மரம் கொக்குவில் பசுக்களின் அன்றைய சந்ததி விருத்தியை உமல்களாகக் காய்த்து, கணக்குக் காட்டிக் கொண்டிருக்கும்.

கைக்குட்டை வைத்திருப்பவர்கள் ஒரு கையால் மூக்கிற்கு அபயம் அளித்தபடி, மறுகையால் உயிரைப் பிடித்துக்கொண்டு, இன்னும் பத்தடி போவார்களானால் 'அட்டாளை முருகேசர்' கொலையுண்ட புனித ஸ்தலம் தென்படும். இந்த மேட்டு நிலத்தில் நின்று கிழக்குப் பக்கமாகப் பார்த்தால் தெரிவதுதான் கிழவியின் பொத்தல் குடிசை.

ஆனால் இப்போது அங்கே இந்த வழியாகப் போகமுடியாது. புளியமர உரிமை வழக்கொன்றில் தாய்க்கும் பிள்ளைக்கும் ஏற்பட்ட தகராறில் 'கவுண்மேந்து' தலையிட்டு குறுக்கு வேலி ஒன்று தற்காலிகமாகப் போட்டிருப்பதால் நேயர்கள் தயவுசெய்து சிரமத்தைப் பாராது வந்த வழியில் திரும்பி கிழவி வழக்கமாகப் போகும் பிள்ளையார் கோவில் ஒழுங்கையால் வருவார்களாக!

எலக்சன் சீசனில் யாரோ ஒட்டிவிட்ட நோட்டிஸ் ஒன்று இன்னமும் கிழவியின் படலையில் விசுவாசத்துடன் ஒட்டிக்கொண்டு இருக்கிறது.

அந்தப் படலையை இழுத்துப் பிடித்தபடி பாறாங்கல் ஒன்று. கையை விட்டவுடன் படலை படாரென்று சத்தத்து டன் மோதிக் கொள்ளும். ஆனால் இதில் ஆச்சரியம் என்ன வென்றால் இதைத்தான் ஆங்கிலத்தில் 'ஆட்டோமெட்டிக் ஷட்டர்' என்று கூறுவார்கள் என்பது கேவலம்,கிழவிக்கோ அல்லது படலைக்கோ தெரியாததுதான்!

சிறிது கடகடத்த அந்தப் படலை மீது நமக்கு இலகுவில் நம்பிக்கை பிறப்பதாகத் தெரியவில்லை. ஆனபடியால், கிழவி வழக்கமாகப் போகும் பொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. முத்துலிங்கம்

வழியாக நாமும் குனிந்து உள்ளே போவோம்.

சளகு ஒன்றிலே ஒடியற் கிழங்கு காய்ந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலே ஈர்க்கிலே ஜம்மென்று குந்தியிருந்த பழ மிளகாய் ஒன்று காக்கைகளை எல்லாம் விரட்டியடித்துக் கொண்டிருக்கிறது. வாசலுக்குக் கொஞ்சம் தள்ளி ஆடு கட்டியிருக்கிறது. பக்கத்தில் ஒரு உழவாரப் பிடியும் கொஞ்சம் புல்லுக்கட்டும்.

ஆடோ, உழவாரமோ புல்லைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.அரைச்சாக்கு நெல்லு காயப் போடக்கூடிய அளவிற்கு ஒரு குந்து. அதை ஒட்டியபடி கிடக்கும் மண் சுவரில் கரிக்கணக்கு எழுதாத இடமாகப் பார்த்து. ஒரு தேதியில்லாத முருகன் கலண்டர், பரிதாபகரமாகத் தொங்குகிறது. வள்ளியம்மை தெய்வானையாருடைய டிரஸைப் பார்த்த அளவில் 'பொங்கு கை' பாஷன் பிரபலமாயிருந்த காலத்தில் கலண்டர் அச்சாகி இருக்கவேண்டும் என்று தோன்றியது.

கிழவி, கோடிப் பக்கத்தில் இறால் நோண்டிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் இருபது வயது மதிக்கக்கூடிய இளைஞன் ஒருத்தன் சோகம் ததும்ப நின்று கொண்டிருந்தான்.
"எடபாவி! உன்னைப் பெத்த வயிறு நெருப்பாய் எரியுமேடா? எப்படித்தான் உனக்கு மனசு வந்தது"

"நான் என்னணை ஆச்சி செய்ய? கொழும்பிலே வேலை ஒண்டுக்கு கட்ட வேணும். அந்த மனுஷிக்கு எப்பிடிப் போட்டு விளங்கப்படுத்தியும் ஏறுதில்லை. என்னை வேறை என்ன செய்யச் சொல்லுறாய்? வேலையானதும் முதல் சம்பளத்திலேயே மீண்டு போடுறன். இப்ப மாத்திரம் என்னைக் கை விட்டிடாதேயணை! வீட்டிலே பொலிசெல்லாம் வந்து சோதினை நடக்குது."

"என்ன"! பொலிசுக்கும் சொல்லிப் போட்டே என்னட்டை வந்தனி! எனக்கு வேண்டாம் ராசா இந்தச் சள்ளை! நாளைக்கு பொலிசுக்காரன்கள் வந்து என்னைப் பிடிச்சு நாலு கேள்வி கேட்க நான் தறதறவென்று முழுச" இளைஞன் கொஞ்சம் உலக சம்பிரதாயம் தெரிந்தவனாகக் காணப்பட்டான்.

"எணை ஆச்சி! நீ பயந்து சாகிறாய்? இப்ப நான் இதைப் பெரிய கடையிலை கொண்டு போய் வைக்கமாட்டேனே. உன்னட்டை எண்டால் அயலுக்கை ஏதோ "அஞ்சு" " பத்து" உனக்கும்".!
'அஞ்சு பத்து' மந்திரம் உடனே பலித்தது!

கிழவி இறாலைக் கழுவி எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். இவ்வளவு நேரமும் காத்திருந்த காகத்தின் வாயில் மண்ணைப் போடுவதற்கென்று எங்கிருந்தோ ஓடி வந்த கிழவியினுடைய வாடிக்கை நாய், அரிவாளை நக்கி எடுத்து, கிழவிக்கு ஒத்தாசை செய்தது.
முந்தானையால் கையைத்துடைத்தபடி "எங்கை எடு பாப்பம்" என்று கையை நீட்டினாள் கிழவி.

நல்ல கனம். குறைஞ்சது நானூறு மதிக்கலாம் என்று கிழவியின் அனுபவக் கை கூறியது.
"இது என்ன இரண்டரைப் பவுனும் தேறாது போலைக் கிடக்கு? எவ்வளவு கேட்கிறாய்?"
"ஒரு முன்னூறு"
"இப்ப உங்கை ஆரிட்டை மாறிறது? சொல்லாச்சியும் மூத்த மோளின்ரை பிள்ளைப் பேத்துக்குச் சிலவழிச்சுப் போட்டு நிற்கிறாள். சின்னமோனை படுத்த படுக்கையாய் கிடக்கிறாள்" இன்னும் என்னவோ எல்லாம் கிழவி முணுமுணுத்தாள். காதில் விழவில்லை.

மடியை இறுக்கிக் கட்டிக்கொண்டு, இறப்பிலே சொருகியிருந்த தடுக்கை இழுத்துத் தட்டி, குந்திலே போட்டாள் கிழவி. "உதிலை இரடாமேனை! அஞ்சு நிமிட்டிலை வந்திடுறன். உந்தக் கட்டயிலை போறவன்ரை மாடு வந்திடும்" ஒருக்கால் பார்த்து கொள்." என்ற படி பிலாவிலைக் கம்பியையும் தூக்கிக்கொண்டு 'முணுமுணு' என்று தன் சொந்த பாஷையில் ஏதோ பேசியபடி புறப்பட்டாள் கிழவி.

பெத்த தாயிட்டைக் களவெடுத்துக் கொண்டு வந்திருக்கு மூதேவி! என்னெண்டுதான் உருப்படப் போகுதோ! லோகம் கெட்டுப்போச்சு. கனகத்தின்ரை மூத்தவன் ஒரு போக்கு அவளுக்கும் வேணும். கொக்குவிலில்லை தன்னட்டைத்தான் கல்லட்டியல் கிடக்கு என்று கெறுக்கு முத்தாச்சியின்ரை செத்த வீட்டுக்கு வந்த இடத்திலே என்னோடை கட்டிப் பிடிச்சு அழக்கூட இல்லை!

நாலு வீட்டுக்கும் போய் கிழவி வருவதற்கிடையில் இளைஞனுடைய முக்கால்வாசிப் பிராணனும் போய்விட்டது. தடுக்கில் இருந்த நெட்டி எல்லாவற்றையும் பிய்த்துப் பிய்த்துப் பல்லைக் குத்தியபடியே இருந்தான்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல், நிரைவிட்டுப் போன கொள்ளி எறும்புகள் வேறு இடைக்கிடை அவன் காலை ருசி பார்த்தன. புல்லுக்கார மனுஷி ஒன்று, என்ன இழவோ சமுசயப்பட்டு, திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே போனாள். அவள் அந்தப் பக்கமும் வருகிறவள்.

கால்சட்டை போட்டபடி குந்தில் இருக்க வெட்கம் பிடுங்கித் தின்றது. பன்னிரண்டு மணிபோல கிழவி யார் யாரையோ திட்டிக்கொண்டே அவர்கள் ஏழேழு தலைமுறையும் என்னென்ன வியாதி வந்து சாக வேண்டுமென்று 'லிஸ்டு' தயாரித்தபடியே வந்து கொண்டிருந்தாள்.

பிலாவிலை நிரம்பி வழிந்தது.வந்தவள் வெகு சாவகாசமாகக் குந்தி இருந்து ஒவ்வொரு இலையாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. முத்துலிங்கம்

கிழித்து ஆட்டுக்குப் போட்டபடியே இருந்தாள்.

இளைஞன் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். கிழவி பேசுவதாய்க் காணோம்! நெருப்பு மேலே இருப்பதுபோல் இருந்தது அவனுக்கு.

"என்னணை ஆச்சி போன விஷயம்?"

"நான் என்னத்தைச் செய்ய?... எல்லா வேசையளும் பஞ்சம் கொட்டுறாளவை உனக்குத் தெரியுமே மூளிக்கார கந்தை யற்றை பேத்தி இப்ப அவள்தான் புதுப்பணக்காரி சாதிக் குணத்தை என்னிலே எல்லே காட்டுறாள். கேளடாமோனை.. கண்டறியாத பூனை கமுகிலே ஏறி?"

அவனுக்குப் பொறுமையில்லை. "அப்ப நான் வரப்போறேன் நீ அதை எடு!"

"என்னடா அதுக்கிடையிலே கோவிக்கிறாய்! ஆக கொக்கு வில்லை அவள் ஒருத்திதானே பணக்காரி. மற்ற எல்லோரும் செத்துப் போனாளவையே? இந்தா இவ்வளவுதான் தேறிச்சுது. ஒருத்தியிட்டையும் இந்த நேரம் இல்லை!"

"எவ்வளவெணை கிடக்கும்?"

"எண்ணிப் பாரேன்! இருபத்தேழு தந்தாள் பாவி. நான் ரெண்டு எடுத்திட்டன். மிச்சம் இருநூற்றம்பது இருக்குது. மாதக் கிடைசியிலே மீண்டுபோடு."

'எமகாதகி' என்று முணுமுணுத்தபடியே கால்சட்டை பைக்குள் காசை வைத்துக்கொண்டு புறப்பட்டான் இளைஞன்.

கச்சான் காற்று அடித்து ஓய்ந்து, மறுபடியும் சோளகம் வீசத் தொடங்கிவிட்டது. கொழும்புக்குப் போனவன் திரும்பிவந்த ஒரு அசுகை, அசுமாத்தத்தையும் காணவில்லை.

கிழவி எதிர்பார்த்ததுதான். கிழவிக்கு என்ன பைத்தியமா, நல்ல பெறுமதியான நகையைக் கொண்டுபோய் வேறு யாரிடமும் வைப்பதற்கு? நகையை வாங்கி வைத்துக் கொண்டு 'வாயைக் கட்டி' சேர்த்த தன்னுடைய காசைத்தான் கொடுத்திருந்தாள்.

மறுபடியும் வந்து கேட்டால் 'கண்டது ஆர், கேட்டது ஆர்' என்று அடிச்சு மூடிவிட்டால் போகிறது.

அன்றைக்கென்று கிழவியினுடைய மூத்த மகள் வந்திருந்தாள்.

"எணை ஆச்சி என்ரை மோளின்ரை சாமத்தியச் சடங்கை கொஞ்சம் 'பப்ளிக்'காய் நாலு பேருக்கும் சொல்லிச் செய்யப் போறன். சிலவுக்கு ஒரு நானூறு எங்கையாலும் மாறித்தாவன். சடங்கு முடிஞ்ச கையோட திருப்பித் தந்திடுவன்"

"இதென்னடி நீ! 'சுடுகுது மடியைப்பிடி' எண்டால் ஆர் தருவினம்? அதுவும் ஆரெண்டாலும் சும்மா தாறண்டவ ளவையே?"

"என்னணை ஆச்சி! ஊரிலே நான் குடுத்த காசெல்லாம் நிக்குது. பொடிச்சியின்ரை சடங்கோட ஒரு ஐந்நூறு அறுநூறாவது சேரும் உன்ரை காசு எனக்கென் னத்துக்கு, அஞ்சு சத வட்டியோட அப்படியே தந்திடுறன்."

"சரி, நீ வீட்டை போ! நான் உங்கினைக்கை பாத்திட்டு வாறன்" என்று கிழக்குப் பக்கம் கையைக் காட்டினாள் கிழவி.

பாக்கியமும் கிழவியினுடைய மகள்தானே. கிழக்குப் பக்கம் கையைக் காட்டினால் மேற்குப் பக்கத்தில்தான் எங்கோ மாறப்போகிறாள் என்ற அர்த்தம்.

'சீனியற்றை செல்லாச்சியாக இருக்குமோ' என்று ஊகித்தபடியே எழுந்து புறப்பட்டாள் பாக்கியம்.

வெய்யில் காய்ந்து கொண்டுதானிருந்தது. எனினும் கிழவியினுடைய தீட்சண்ய புத்தியிலே மழை பெய்யும் போலப்பட்டது.

அப்படியே காயப்போட்ட விறகுகளை அவசர அவசரமாக அள்ளி 'அசைவிலே' அடுக்கினாள்.

பிலாவிலைக் கம்பியையும் தூக்கிக்கொண்டு அடிக்கடி மடியைத் தொட்டுப் பார்த்தபடியே புறப்பட்டாள் கிழவி.

சொந்த மகளிடமே வட்டிக்குக் கொடுக்கும் சுவாரஸ் யத்தை இதற்கு முன்பு அவள் அனுபவித்தது கிடையாது. செல்லாச்சியிடம் கொடுத்தால் கண்ணை மூடிக்கொண்டு நானூறு தருவாள்.

கிழவிக்கு என்னவோ ஞாபகம். முடியானைப் பிரித்துப் பார்த்தாள். ஏதோ மாதிரி இருந்தது.

வெளிச்சத்தில் எடுத்து உற்றுப் பார்த்தாள். வயிறு பகீரென்றது! கண்ணெல்லாம் சுழட்டிக்கொண்டு வந்தது. நடு வழியில் கிழவி பொத்தென்று குந்திவிட்டாள்.

நடுங்கும் அந்தக் கையிலே கிடந்த நகை அவளைப் பார்த்து இளித்தது. என்ன இருந்தாலும் பித்தளை பித்தளை தானே! எங்கோ சேவல் ஒன்று படபடவென்று செட்டையை அடித்துக் கொண்டது.

மின்னவில்லை! முழங்கவில்லை! 'படீர் படீர்' என்று தடித்த மழைத் துளிகள் அங்கும் இங்கும் பொட்டுப் பொட்டாக விழுந்து தெறித்தன. கிழவியின் வரண்ட கண்ணீர் விழுந்த இடம் தெரியவே இல்லை!

இயல்பான கொக்குவில் புழுதியின் வாசனை கம்மென்று வீசியது.

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரா

தெருவோரம் நின்று தெருவை வாய் பார்ப்பதில் எனக்கு எப்போதும் ஒரு அலாதிப்பிரியமுண்டு. வீதியில் பயணிக்கும் ஒவ்வொருவரும் வேறு வேறு தேவைகளோடும் நோக்கங்களோடும் நகர்ந்துகொண்டிருப்பதை நின்று ரசிப்பதில் அப்படியொரு இன்பம். பெருந்தெரு ஒன்றினருகில் மாடி வீடு கட்டி மாடியில் நின்று தெருவை ரசிக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசைகளில் ஒன்று. எந்தவொரு நீண்டதூரப் பயணத்தின்போதும் அருகிலிருப்பவருடன் பேசிக்தொண்டிருப்பதையோ தொலைபேசியை நோண்டிக்கொண்டிருப்பதையோ விட ஜன்னலோர இருக்கையிலமர்ந்து தெருவை ரசிப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

அப்படியொரு பயண நாள்தான் அது. இலங்கையின் பரபரப்பாய் இயங்கிக்கொண்டிக்கும் நகரங்களிலொன்றிற்குச் சென்றிருந்தேன். வழமைபோல் பெருந்தெருக்களையும் கடைத்தொகுதிகளையும் வாகனங்களையும் பார்த்துக் கொண்டே வீதியோரமாக நடந்துகொண்டிருந்த என் கண்கள் திடீரென ஓர் இடத்தில் நிலைகொண்டன. நின்று மீண்டும் திரும்பிப்பார்த்து உண்மைதானா என யோசித்தேன். என் கண்கள் கண்டுகொண்ட அந்த முகம் நான் எப்போதோ கண்ட ஒரு முகம்தான் என்று தோன்றியது. இல்லை இருக்காது. அந்த மனிதருக்கும் இந்தத்தோற்றத்திற்கும் சம்மந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அருகில் சென்று உறுதி செய்ய மனம் துடித்தது. சென்றேன். ஏன் இல்லை!



# தொலைந்துபோன மனிதன்



அது அவரேதான். நிச்சயமாக அந்த நபர்தான். கண்டு பல வருடங்களாகிவிட்டது. ஆனாலும் அவர்தான் என்று என்னால் உறுதிசெய்ய முடிந்தது. அதிககாலம் பழகாவிட்டாலும் பழகிய கொஞ்சக்காலத்திலேயே என் மனதில் பதிந்த அந்த நபர் என்னுடைய நெருங்கிய உறவினர். பேரும் புகழும் ஈட்டித்தரும் தொழில் எதுவும் செய்யாவிட்டாலும் செய்யும் தொழில் எதுவாகவிருந்தாலும் நேர்மையாக பிழையின்றி செய்துமுடிக்கும் ஒருவர். எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பவர். "எப்பிடியெல்லாம் இருந்த பெடியன், அந்தக்காலத்தில நல்லா உழைச்சவன், கூலி வேலை செய்தாலும் றங்குப்பெட்டில காசு சேத்து வச்சிருந்தவன், கொஞ்சம் நப்பிதான் ஆனா ஒரு குளப்படியும் இல்லாதவன், இப்ப எங்க என்ன செய்யிறானோ தெரியேல" இப்படி அம்மா கூட ஒரு தடவை சொல்லியிருக்கிறார்.

இளவயதில் வந்த காதல் சாதி மதம் பார்க்கவில்லை. காதலித்த பெண்ணை எப்படியேனும் மணந்துகொள்ள விரும்பியவர் சிறுவயதிலேயே பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்துகெண்டார். பின்னர் யாழ்ப்பாணத்திலே இந்திய இராணுவ பிரச்சனை ஆரம்பித்த காலத்திலே தன்னையும் மனைவியையும் காப்பாற்றிக்கொள்ள வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றிருந்தார். காதல் மனைவியோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருந்தார். பின்நாட்களில் வன்னியிலே ஈழப் போராட்ட இயக்கத்தின் அலுவலகம் ஒன்றிலே முக்கிய பதவி ஒன்று வகித்தவர்தான் இப்போது நான் இந்தக்கோலத்தில் கண்டுகொண்ட மனிதர்.

மனைவியின் கற்பகாலத்தில் கூடவேயிருந்து கவனித்துக்கொண்டவர். எதிர்காலம் பற்றிய பல கனவுகளுடனே குழந்தைப்பேற்றிற்காய் மனைவியை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு வைத்தியசாலைக்கு வெளியே காத்திருந்தவருக்கு மனைவியின் இறப்புச் செய்திதான் கிடைத்தது. கையிலே குழந்தையைக் கொடுத்த தாதி தாயாரைக் காப்பாற்ற முடியவில்லை என்று வருத்தத்தோடு சொல்லிச் செல்ல தன் முகத்தை பார்த்துக்கொண்டே சிவந்த பிஞ்சுக்கரங்களையும் கால்களையும் உதைத்து அழுதுகொண்டிருந்த பெண் பிள்ளையைப் பார்த்து மகிழ்வதா, இல்லை குழந்தையை மட்டுமே காப்பாற்ற முடிந்தது என்ற செய்தியைக் கேட்டு இறந்துபோன மனைவியைப்பார்த்து அழுவதா என்று கூடப் புரியவில்லை. உறவினர்கள் யாருமில்லாததால் இறந்த மனைவியின் உடலை தகனம் செய்யும் பொறுப்பை வைத்தியசாலையே ஏற்க குழந்தையோடு செய்வதறியாது புறப்பட்டவருக்கு இடப்பெயர்வு தந்த வரமாய் அண்ணன் குடும்பம் வன்னிக்கு வந்து சேர்ந்தது. ஏற்கனவே மூன்று பெண்பிள்ளைகளைக் கொண்ட அண்ணி நான்காவது பெண் பிள்ளையையும் மகிழ்வாக ஏற்றுக்கொள்ள காலம் சுழன்றது. அதிகரித்த மலேரியாத் தொற்று அண்ணியை வைத்தியசாலையில் படுக்கை போட்டது. அண்ணன் வேலைக்குச் செல்ல குழந்தையைப் பார்த்துக்கொள்ளுமளவுக்கு வயதோ பக்குவமோ இல்லாத அண்ணனின் பிள்ளைகள் ஒருபுறம், பசியால் வீறிட்டு அழும் அவர் குழந்தை மற்றொரு புறம். பசியால் துடித்த குழந்தைக்கு பாலைப் போத்தலில் விட்டு வாய்க்குள் வைக்க அது திமிறிப் புரண்டு கால் கைகளை அடித்துக் கொண்டழுதது. மூச்சு முட்டி அந்தரித்த குழந்தையோடு அருகிலிருந்த வீடொன்றை அடைந்தார். அவர்கள் எவ்வளவோ சமாளித்தும் அடங்காத குழந்தையின் அழுகை சளி அடைத்து உயிரை நிறுத்திக்கொண்டது. வாழ வேண்டிய வயது தந்த தாங்க இயலாத வலிகளோடு துடித்த அந்த மனிதர்தான் இப்போது இங்கே கையிலிருக்கும் ஒருதுண்டு பாணை தெருநாய்களுக்குப் பிய்த்துப் போட்டுக்கொண்டிருக்கிறார்.

வருடங்கள் கழிந்தது. இளவயதுத் தோற்றம் மாறி சற்று மிடுக்கான தோற்றம் கிடைத்தது. மனைவியும் குழந்தையும் இறந்த வலி மனதின் ஓரத்தில் இருந்து இன்னும் வலித்தது. இன்னொரு வாழ்வை எதிர்பார்க்காதவருக்கு வன்னிக்கு வந்து சேர்ந்த சில உறவினர்கள் மீண்டும் திருமணம் செய்துகொள் எல்லாம் சரியாகும் என்று ஆறுதலளித்தனர். வயது இளமைப் பருவத்தை தாண்டியிருந்தது. ஏற்கனவே வாழ்வை இழந்துவிட்ட எனக்கு இனி எதற்குத் திருமணம்? நான் இப்படியே இருந்துவிட்டுப் போகிறேன்... என்று மறுத்தார். சிறுவயதுக் காதல், குடும்பத்தை எதிர்த்துத் திருமணம் ஆனால் அது நாட்டு சூழ்நிலையால் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை. இடப்பெயர்வு, மனைவி பிள்ளையின் தொடர்ச்சியான இழப்பு இவையெல்லாம் ஒரு ஆணுக்கு நடந்துமுடிந்து வாழ்வை வெறுக்க வேண்டிய வயதில்லை இது. என்ன செய்வது விதி அப்படி ஆகிவிட்டது. அதற்காக அப்படியே இருந்துவிட முடியுமா? மறுக்காமல் சம்மதித்துவிடு வாழ்க்கை மாறும் எனப் பல அறிவுரைகளோடு மறு திருமண ஏற்பாடு நடந்தேறியது. ஏற்கனவே திருமணமாகி இரண்டு பிள்ளைகளோடு கணவனைப் போராட்டத்தில் இழந்த பெண் ஒருவர் இந்த மனிதருக்கு மனைவியாக்கப்பட்டாள். இவர்களுக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தை “அப்பா” என அழைத்த போது வாழ்வின் வலி அத்தனையும் தொலைந்தது. பிள்ளையே உலகமாய் நாட்கள் நகர்ந்தன.

தன் வாழ்வில் விதி மீண்டும் ஒரு தாண்டவமாடும் என்று அவர் ஒரு போதும் எண்ணவில்லை. ஆனால் நினைப்பது எல்லாம் நடப்பதில்லையே. நாட்டில் இறுதி யுத்த காலம் அது. போருக்குள் குடும்பத்தை தவற விட்டவர் அநாதையாக புனர்வாழ்வு முகாமிற்குள் புகுந்து கொண்டார். மனைவி பிள்ளைகள் கடைசிவரை கிடைக்கவில்லை. தேடித்தேடி தன்னையே தன்னிடம் தொலைத்துவிட்டவர்தான் இவ்வாறு வீதியோரமாய் மெலிந்த குள்ளமான தோற்றத்தோடு ஒற்றைக்காலை இழுத்தபடி ஒரு துண்டுச் சாரம் மட்டும் அணிந்துகொண்டு தோளிலே ஒரு துணிப்பையுடன் நடந்து செல்கிறார். ஆம் அது அவரே தான். என்னால் நிச்சயமாக அடையாளம் காண முடியும். எனக்கு நன்றாகத் தெரிந்த முகம்.

புனர்வாழ்வில் இருந்தபோது தகவல் கிடைத்தது. பின்னர் எங்களூருக்கு வந்து சேர்ந்தார். முன்புபோல் பெரிதாக எதுவும் பேசிக்கொள்ளவில்லை. எப்போதும் வெறுமையான அமைதியான முகம். புதிதாக எந்தவொரு தொழிலையும் செய்வதற்கான ஆர்வம் இருக்கவில்லை. மூன்று வேளை உணவுகூடத் தேவைப்படவில்லை. சாதாரணமாகப் பேசிச் சிரித்து மகிழ முடியவில்லை. வானொலி, தொலைக் காட்சி, கைத்தொலைபேசி ஏன் பத்திரிகையேனும் தேவைப்படவில்லை. கதை கேட்பவர்களை கண்டாலே பிடிக்கவில்லை. தனிமையே அதிகம் வசதியாயிருந்தது. கொஞ்சம் மதுவும் தேவைப்பட்டது. ஏன்? எதற்கு? எதுவுமே புரியாத வாழ்வு அவரை அங்கிருந்து காணாமலாக்கி இப்போது ஒன்பது வருடங்களாகிவிட்டது. தொலைந்து போனவரை அவருடைய அண்ணன் மட்டுமே தன் முதிர்ந்த வயதிலும் இன்றுவரை தேடிக்கொண்டிருக்கிறார். இப்போது வீதிகளில் அலைந்து திரிபவர் என்னிடமும் வந்து சில்லறைகள் நிறைந்த கையை நீட்டுகிறார்....

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி சிறுகதைகள்

## ஒரு பார்வை

செ. யோகராசா

மஞ்சரி 25

**கடவுள் நகரத்தில் பிச்சைபுகு காண்டம் - வசந்தரூபன்**

தமிழ்நாட்டு வாசகர்களைத் தவிர ஏனைய வாசகர்களுக்கு முற்றிலும் புதிய அனுபவம். புதிய களம். நுண்மையான படப்பிடிப்பு. அனுபவம் பேசுகிறது என்று சொல்லும் தரமான எடுத்துரைப்பு முறை. எழுத்தாளருக்கு விசேட பாராட்டுகள். முடிவும் முத்தாய்ப்பாய் அமைந்திருப்பின் இன்னும் சிறப்படைந்திருக்கும்.

**அடைக்கலம் - க. தனுசியா**

பழைய கரு. எடுத்துரைப்பு முறைமட்டும் கவர்ச்சி தருகிறது. ஆரம்பகாலத்தில் சமூகம் புறக்கணித்த நிலையினை மனங்கொண்டு மன உணர்வை மேலும் கூர்மைப்படுத்தியிருக்கலாம். கதையையும் அத்திசையில் நகர்த்தியிருக்கலாம். இக்கதையை தமிழ்நாட்டில் நிகழ்வதாக சில வாகர்கள் கருதும் வாய்ப்பும் உண்டு.

**சிட்டுக்குருவி - கு. குணறுபேஸ்**

உள்ளூர் இடப்பெயர்வின்போது இத்தகைய அனுபவம் சிலருக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. புலம்பெயர் சூழலிலும் ஆரம்பகாலத்தில் அந்நியமான நிலையில் ஒரு சில படைப்புகளில் இவ்வாறான குருவிகள் வந்து சென்றதாக நினைவு. எனவே பேசுபொருள் அனுபவம் சார்ந்தது என்பதில் ஐயமில்லை. எனினும் மேன்மேலும் செதுக்குவதோடு இன்னொரு தளத்திற்கும் நகர்த்தியிருப்பின் முக்கியமான சிருஸ்டியாக உருவாகியிருக்கும்.

**நிஜங்கள் பேசுகிறது - து. மதனரூபி**

பேசப்படுவது நிஜங்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எனினும் கதையூடாக வெளிப்படுத்தப்படும் செய்தி கனதியானதன்று. நிதானமாக வாசிப்போர் இச் சிறுகதை முழுமைத்தன்மை பெற்றிருக்கவில்லை என்று உணரவும் வாய்ப்புள்ளது.

**ஆழ்மனக்குமுறல் - ஆர்த்திகா சுவேந்திரன்**

வித்தியாசமான கரு. வித்தியாசமான களம் என்பதைவிட வித்தியாசமான பாத்திர சிருஸ்டி என்பதில் பாராட்டக்கூடிய படைப்பு! சிட்டுக்குருவியில்வரும் சுதாகரன் போன்று இச் சிறுகதையில்வரும் பாத்திரத்தையும் வாசகர் கண்டிருப்பர் அல்லது தாமே அவ்வாறு அனுபவம் கொண்டிருப்பர் என்பதில் ஐயமில்லை என்ற விதத்தில் பாராட்டிற்குரிய படைப்பே!

**அமாவாசைக்குள் ஒரு இரவு - பசறையூர் ஏ.எஸ் பாலச்சந்திரன்.**

இச் சிறுகதையும் பழைய கருவே எனினும் முடிவு சிறிது வித்தியாசப்படுவதால் கவனிக்கக்கூடிய சிருஸ்டியாகும். அந்த வித்தியாசமான முடிவைக் கருவாகக் கொண்டு மோகனின் மனப் போராட்டங்களை விவரித்திருப்பின் பேசக் கூடிய கதையாகப் பரிணமித்திருக்கும்.

**மேலதிக குறிப்பு:**

சிறுகதையின் இயல்புகள் குறித்து தகவல்கள் அதிகம் வருவது வரவேற்கக்கூடியது. இளந்தலைமுறை எழுத்தாளர்கள் அவற்றைப் பொறுமையாக வாசித்தால் மட்டுமே எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக வரலாம் என்பதை மனதிலிருத்திக் கொள்ளுங்கள்.

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தயாளன்



# சிறுகதை எழுதுவது எப்படி?

## ஒழுங்குபடுத்தல்

கதையை பக்கம் பக்கமாக எழுதி விபரிப்பதற்கான இடம் சிறுகதையில் இல்லாது போனாலும் அதனை ஒழுங்கு படுத்தலுக்கான இடம் தாராளமாகவே உள்ளது. உங்களின் கதையினுடைய பாத்திரங்கள் அகண்ட வெளியில் உரையாட முடியாது. அதாவது பாத்திரங்கள் உரையாடு வதற்கான இடங்களை எழுத்தாளன் தன் திறமையால் உருவாக்க வேண்டும். முன்பு நான் கூறிய புளியமரம் கதையை எடுத்துக் கொண்டால் அதனுடைய முக்கியமான பாத்திரங்களின் உரையாடலுக்கான இடமாக பேருந்தினைத் தெரிந்து கொண்டேன். ஏனென்றால் புளியமரம் கதை வீதியில் நிற்கும் ஒரு புளிய மரத்தையே சுற்றி வருவதால் அந்தப் புளியமரம் இருந்த இடத்தைத் தாண்டிச் செல்லும் பேருந்தினைத் தேர்வு செய்தேன். ஆக உங்கள் பாத்திரங்கள் கதையை நகர்த்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் உரையாடத் தொடங்குதல் வேண்டும் என்பதே தேவை யாகும்.

## கால நிர்ணயம்

ஒரு சிறுகதையின் கால நிர்ணயம் மிக விரைவானதாக இருக்கவேண்டும். மிக நீண்ட ஒழுங்கமைப்புக்கு சிறு கதையில் நீண்ட நேரம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வாசகனை மிக விரைவாக கதையின் கருவை அண்மிக்கச் செய்துவிட வேண்டும். அதேபோல கதை விரைவாக வாசகனை கதையின் முடிவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். எந்த ஒரு சிறுகதையும் நீண்ட காலத்தைக் கதை நடைபெறும் காலமாகக் கொள்ளுதல் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஒரு காலை நேரம் அல்லது மாலை நேரம் கதை தொடங்கி முடிவதற்கான காலமாக இருக்க வேண்டும். ஆகக் கூட ஒரு சில நாட்களாகவும் கொள்ளலாம்.

## மீட்டல்

சில வேளைகளில் உங்கள் கதையை ஒழுங்கமைக்கும் போது அக்கதை மிகக் கூடிய கால இடைவெளியில் நடந்து கொள்வதாக இருந்தால் அதனை நீங்கள் உருவாக்கிய பாத்திரம் நினைத்துக் கொள்வதாக அல்லது மீட்டல் செய்வதாக அமைக்கலாம். இப்படி அமைக்கும் போது கதை சிறுகதையின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகிறது. ஆனாலும் கதையின் நீளம் கூடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மையப் பொருள்

ஒரு கதையின் மையக் கருத்தானது கதையில் நடைபெறும் சம்பவங்களை இணைத்து ஒழுங்கமைக்கும் பிசின் போன்ற தாகும் அதாவது சம்பவங்களை மையக் கருத்தானது ஒன்றோடொன்று ஒட்டிவிடும் தன்மை கொண்டதாகும்.

சிறுகதையானது எதைப்பற்றிச் சொல்ல முயல்கிறது என்பதை மையக்கருத்து வாசகனுக்குப் புலப்படுத்திவிடுகிறது. அது தனிமை பற்றியதாகவோ அல்லது பழிவாங்கல் பற்றியதாகவோ அல்லது பச்சாதாபம் பற்றியதாகவோ இருக்கலாம். இவற்றை மையக் கருத்து வாசகனுக்கு இனங்காட்டிவிடுகிறது. எழுத்தாளன் மையக் கருத்துபற்றி தெளிவாக இருந்தால் கதையை இறுக்கமாகவும் சுவை யாகவும் அமைத்துவிடலாம். மையப்பொருள் வாசகனை கவர்ந்திழுக்கவேண்டும். வாசகன் மனதில் மையப் பொருள் ஒரு மாற்றத்தை உருவாக்கி முடிவு என்னவாக இருக்கும் என்று அவன் மனதிற்குள் ஒரு வினாவை எழுப்ப வைத்து முடிவை நோக்கி அவன் விரைந்து செல்லவேண்டும். சிறுகதைப் படைப்பாளிகள் சிறுகதையாக எழுதக் கூடிய மையப் பொருளை தேர்ந்தெடுப்பதில் அதி சிரத்தை எடுக்க வேண்டும். சிறுகதையில் எல்லாவிதமான உணர்வுகளையும் காட்டிவிடலாம் என்று நினைப்பதும் தவறாகும். ஒரு சம்பவத்தின் ஒரு பொறியே சிறுகதையாக மாறியுள்ளதை உங்கள் பரந்த வாசிப்புகளினூடாக அறிந்து கொள்ள முடியும்.

அடுத்த இதழிலிருந்து சிறுகதை எழுதுவதற்கான உத்திகள் பற்றியும் எப்படிக் கதையை எங்கே தொடங்குவது என்பது பற்றியும் பார்ப்போம்.

(இன்னும் வரும்..)

◇◇◇◇◇

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. Kugan
72, 2nd Lane
Anandapuri
Trinco

LUXMI
EDUCATION CENTRE

# LEC



## ENROLLING NOW
2022 / 2023

**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD,
WHITE GOLD, PLATINUM &
DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

SILK
EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org